கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(03.02.2019 - 03 மாசி 2019 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 201, 16 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /49 / NEWS / 2019

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

**ஆண்டவரைக் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தல்** மாசி – 02



**கிறிஸ்தவ குழுமங்களின் உரிமைகள் மதிக்கப்படவும், சித்திரவதைப்பட்டோர் கிறிஸ்துவை நெருக்கமாக உணரவும் செபிப்போம்.**

**திருத்தந்தையோடு இம்மாதம் முழுவதும் மன்றாடுவோம்**

# இயேசு உங்களுக்காக நிர்ணயித்துள்ள பணி இன்றே தொடங்குகின்றது.

இளமை என்பது, காத்திருக்கும் காலம் என்று நீங்கள் எண்ணக்கூடும். அவ்வாறு நீங்கள் காத்திருக்கும்போது, உங்கள் எதிர்காலத்தை முற்றிலும் பாதுகாப்பாக மாற்றுவதாகச் சொல்லி, ஒரு கற்பனை உலகை உங்களுக்காக மற்றவர்கள் உருவாக்கக்கூடும். ஆகவே உங்கள் எதிர்காலம் தூரத்தில் இல்லை. நீங்களே கடவுளின் “இப்போது“. கடவுள் உங்களைக் குறித்து கண்டுள்ள கனவை நனவாக்க இதுவே தகுந்த தருணம். இன்று தொடங்கும் உங்கள் பணியின் மீது முழு ஈடுபாடு கொள்ளுங்கள். இறையடியார், பேத்ரோ அருப்பே (Pedro Arrupe) அவர்கள் கூறியுள்ளதுபோல், நீங்கள் எதன்மீது அன்பு கொள்கிறீர்களோ, அதுவே, உங்கள் பணியாக மாறும்.

இன்று, இப்போது, ஒவ்வொரு செயல்பாட்டிலும் இயேசு பிரசன்னமாகியிருக்கிறார். இயேசு உங்களுக்காக நிர்ணயித்துள்ள பணி, இன்றே தொடங்குகிறது. இந்தப் பணி உங்கள் வாழ்வாக மாறட்டும்!





**உலக இளையோர் தினத்தின் இறுதிநாள் திருப்பலியின் மறையுரையில் திருத்தந்தை....**

## இயேசு சபைக்கு இன்னுமொரு புதிய குரு




## குருத்துவ திருநிலைப்படுத்தலின் பொன்விழா



அருட்பணி. ஐவன் பெரேரா அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தலின் பொன்விழா நன்றித் திருப்பலி இம்மாதம் 2ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு மருதானை புனித சூசையப்பர் கல்லூரியின் சிற்றாலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படுகின்றது. இவர் கொழும்பு உயர்மறைமாவட்ட மற்றும் தேசிய கத்தோலிக்க கல்வி இயக்குனராக பணியாற்றுகின்றார். இவரை ஞான ஒளி வாழ்த்துகின்றது.

## இலங்கை அன்னை திருவிழா



இலங்கை அன்னையின் வருடாந்த திருவிழா இம்மாதம் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேவத்தை தேசிய பேராலயத்தில் கொண்டாடப்படுகின்றது. அன்று நண்பகல் 12.15 மணிக்கு தமிழில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகிறது.

## 71வது சுதந்திர தினம்




இறைவனால் சுதந்திரமாக படைக்கப்பட்ட மனிதன் சுதந்திரமாக சுதந்திர காற்றை இனிவரும் காலங்களில் சுவாசிக்கவும், எமது நாட்டு மக்கள் இன, மத, பேதமின்றி ஒற்றுமையும் சமாதானமும் கொண்டு வாழவும் இறையாசீரோடு சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

## குறுங்கால கற்கைநெறி பற்றிய அறிவித்தல்


கொழும்பு உயர்மறைமாவட்ட இறையியலகம் ஏற்கனவே ஞான ஒளி பத்தரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கேற்ப “யார் இந்த இயேசுகிறிஸ்து” என்ற தலைப்பிலே குறுங்கால கற்கை நெறியை கடந்த சனிக்கிழமை ஆரம்பித்துள்ளது. கடந்த வாரம் பலபேர் அதிலே கலந்து கொண்டு பயனடைந்தனர். இன்னும் இதிலே சேரவிரும்புவோர் வருகின்ற சனிக்கிழமையும் பதிவு செய்து கொள்ளலாம். கற்கைநெறியானது கொழும்பு புனித அக்குவைனாஸ் பல்கலைக்கழகத்திலே தமிழ் விரிவுரை மண்டபத்திலே ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 4.00 மணி முதல் 6.00 மணி வரை நடாத்தப்படும். அனைவரும் திரண்டு வந்து ஆண்டவர் இயேசுவைப்பற்றி அறிய, அன்புடன் அழைக்கின்றோம். விரிவுரையாளர் அருட்பணி. ஜெரால்ட் றொசாய்ரோ அமதி.

**தகவல் : அருட்பணி. றெஜினோல்ட் அமதி.**

## ஆயர் திருநிலைப்படுத்தல் ஆண்டுவிழா



**மேதகு ஆயர். மேரியஸ் பீரிஸ் ஆண்டகை**
**03.02.2019**



**மேதகு ஆயர். மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை**
**11.02.2019**



**மேதகு ஆயர். இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை**
**11.02.2019**

தமது ஆயர் திருநிலைப்படுத்தலின் நினைவு நாளை மூவாயர்களும் இம்மாதம் நினைவுகூறுகின்றனர். இவர்கள் உடல் உள சுகத்தோடு தமது ஆயர்த்துவ பணியை தொடர்ந்திட ஞான ஒளி செபத்தினூடாக வாழ்த்துகின்றது.

**படைகளின் ஆண்டவர் இவர், இவரே மாட்சி மிகு மன்னர் (தி.பா 24)**

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் உள்ள கத்தோலிக்க தனியார் பாடசாலைகளில், தரம் 01ல், 2020ஆம் ஆண்டு மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்குதல் தொடர்பான விபரம்

**பாடசாலைகளில் கேட்கப்படும் முக்கியமான ஆவணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அவற்றையும் நேர்முகப்பரீட்சைக்கு செல்லும்போது கொண்டு செல்லவும்**

1. குழந்தையின் பிறப்பு சான்றிதழ்
2. குழந்தையின் திருமுழுக்கு சான்றிதழ்
3. பெற்றோரின் திருமண சான்றிதழ்
4. குடும்ப புத்தகம்
5. பெற்றோரின் தேசிய அடையாள அட்டை

| இல | பாடசாலையின் பெயர் | திகதிகள் | நேரம் |
|---|---|---|---|
| 01 | புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு 10 வத்தளை கிளை, எந்தேரமுல்லை, வத்தளை | மாசி 15,16,18 மற்றும் 20ம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 8.00 - பி.ப 01.30 மணிவரை |
| 02 | டி மெசனட் கல்லூரி, கந்தானை | மாசி 16ஆம் மற்றும் 23ஆம் திகதிகள் 2019 (சனிக்கிழமைகள்) | காலை 08.30 - பி.ப 01.00 மணிவரை |
| 03 | புனித லோரன்ஸ் கன்னியர் மடம், கொழும்பு - 06 | மாசி 18ஆம் திகதி 2019 : பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>மாசி 18ஆம் திகதி 2019 : அனைத்து கத்தோலிக்க மாணவர்கள். மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். அத்தோடு PPA உறுப்பினர் அட்டை, சகோதரிகளின் பதிவு புத்தகம், புனித லோரன்ஸ் பாலர் பாடசாலையில் பதிவு புத்தகம் ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 09.00 - 11.00 மணி வரை<br>நண்பகல் 12.00 - பி.ப 02.00 மணி வரை |
| 04 | திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு 04 | மாசி 21ம், 22ம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். பெற்றோருக்கு மட்டுமே விண்ணப்பங்கள் வழங்கப்படும். | காலை 08.00 - நண்பகல் 12.00 மணி வரை |
| 05 | ஆவே மரியா கன்னியர் மடம், நீர்கொழும்பு | மாசி 23ஆம் திகதி 2019 : (சனிக்கிழமை) ஆவே மரியா பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள்,<br>02 பங்குனி 2019 : (சனிக்கிழமை) ஏனைய மாணவர்கள். - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். அத்தோடு பழைய மாணவர்களின் உறுப்பினர் அட்டை, சகோதரிகளின் பதிவு புத்தகம், ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.00 - 01.30 மணி வரை<br>காலை 08.00 - 03.30 மணி வரை |
| 06 | புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை | மாசி 25, 26, 27 மற்றும் 28ம் திகதிகள் 2019 | காலை 08.00 - நண்பகல் 12.00 மணி |
| 07 | நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13 | மாசி 25, 2019 : நல்லாயன் பாலர் பாடசாலையில் கற்கும் மாணவர்கள், பாடசாலையில் படிக்கும் மாணவிகளின் சகோதரிகள் - பதிவு புத்தகம், மற்றும் பழைய மாணவர்களின் பிள்ளைகள், பழைய மாணவர்கள் அல்லாத பாடசாலை அபிவிருத்தி சங்கத்தில் தொடர்ச்சியாக 5 வருட சேவை செய்த பெற்றோர்களின் பிள்ளைகள்.<br>மாசி 26ஆம், 27ஆம் திகதிகள் 2019 : மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். பழைய மாணவர்களின் உறுப்பினர் அட்டை, சகோதரிகளின் பதிவு புத்தகம், ஆகியவற்றை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.00 - 9.00 மணி வரை |
| 08 | திருக்குடும்ப கன்னியர் மடம், களுத்துறை | மாசி 27ஆம், 28ஆம் திகதிகள் - 2019 | பிற்பகல் 02.00 - 05.00 மணி வரை |
| 09 | கிறிஸ்து அரசர் கல்லூரி, பன்னிப்பிட்டிய | மாசி 28ம், மற்றும் பங்குனி 01ம் திகதிகள் 2019 | காலை 8.00 - 11.00 மணி வரை |
| 10 | வெற்றிமாதா கன்னியர் மடம், மொறட்டுவை | பங்குனி 01, 02ஆம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 06.30 - இலக்கம் வழங்குதல்<br>காலை 09.00 - நண்பகல் 12.00 மணி வரை - விண்ணப்பம் வழங்குதல் |
| 11 | திருச்சிலுவை கல்லூரி, களுத்துறை, பயாகலை, கிளை பயாகலை | பங்குனி 04ம் திகதி 2019 | காலை 8.00 - 10.00 மணி வரை |
| 12 | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு - 04 | பங்குனி 05ஆம் திகதி 2019 : பாடசாலையில் படித்த பழைய மாணவர்களின் பிள்ளைகள், பாடசாலையில் படிக்கும் மாணவர்களின் சகோதரர்கள்<br>பங்குனி 06ஆம், 07ஆம் மற்றும் 8ஆம் திகதிகள் 2019 : எல்லா கத்தோலிக்க மாணவர்கள். மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 09.00 - 12.00 மணி வரை |
| 13 | புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு - 10 நீர்கொழும்பு கிளை, கடோல்கலே, நீர்கொழும்பு | பங்குனி 06 தொடக்கம் 08ஆம் திகதி வரை 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 8.30 - 01.30 மணி வரை |
| 14 | லொயலா கல்லூரி, நீர்கொழும்பு, போபிட்டிய கிளை, பமுனுகம | பங்குனி 07ம் மற்றும் 8ம் திகதிகள் 2019 | பி.ப 02.00 - மாலை 05.00 மணி வரை |
| 15 | லொயலா கல்லூரி, நீர்கொழும்பு | பங்குனி 07 தொடக்கம் 09ஆம் திகதி 2019 | காலை 9.00 - பி.ப 02.00 மணிவரை |
| 16 | புனித பெனடிக்ட் கல்லூரி, கொழும்பு - 13 | பங்குனி 09ஆம், 16ஆம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 17 | புனித யூட் கல்லூரி, குரண, நீர்கொழும்பு | பங்குனி 11ம், 12ம் மற்றும் 13ம் திகதிகள் 2019 | காலை 08.00 - 12.00 மணி வரை |
| 18 | கிறிஸ்து அரசர் கல்லூரி, வெலிவேரிய | பங்குனி 11ஆம், 12ஆம் திகதிகள் - 2019 | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 19 | புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு - 10 | பங்குனி 11 தொடக்கம் 15ஆம் திகதி வரை 2019 | காலை 9.30 - 01.00 மணி வரை |
| 20 | புனித பிரிஜட் கன்னியர்மடம், கொழும்பு -07 | பங்குனி 12ம், 13ம் மற்றும் 14ம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். PPA உறுப்பினர் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.30 - 10.30 மணி வரை |
| 21 | புனித பேதுரு கல்லூரி, கொழும்பு - 04 உடுகம்பொல கிளை, கம்பஹா | பங்குனி 13, 14, மற்றும் 15ம் திகதிகள் 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | பிற்பகல் 2.00 - 04.00 மணி வரை |
| 22 | திருச்சிலுவை கல்லூரி, களுத்துறை | பங்குனி 16ம் திகதி 2019 - மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 8.00 - 03.00 மணி வரை |
| 23 | மாரிஸ்டெலா கல்லூரி, நீர்கொழும்பு | பங்குனி 16ம் திகதி 2019 - விண்ணப்பங்களை வழங்குதல்<br>பங்குனி 23 திகதி 2019 - விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் நாள் மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். | காலை 9.00 - 12.00 மணி வரை |
| 24 | தூய சம்மனசுகள் மகளிர் பாடசாலை, பயாகலை | பங்குனி 19ம் திகதி 2019 | காலை 8.30 - 02.30 மணி வரை |
| 25 | நல்லாயன் கன்னியர் மடம், பானந்துரை | பங்குனி 21ஆம், திகதி - 2019 அனைத்து கத்தோலிக்க மாணவர்கள்<br>பங்குனி 22ஆம், திகதி - 2019 கத்தோலிக்கர் அல்லாத மாணவர்கள் | காலை 11.00 - 01.00 மணி வரை |
| 26 | ஆவேமரியா கன்னியர் மடம், போலவலானை | பங்குனி 27, 08 மற்றும் 29ம் திகதிகள் 2019 | பி.ப 12.30 - 3.00 மணி வரை |

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI

இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
03 மாசி, 2019 ஞாயிற்றுக்கிழமை.

# "ஒருவன் தான் பெற்ற சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் அளிக்கவேண்டும்."

"சுதந்திரம் இல்லாமல் ஒருவன் மகிழ்ச்சியாகவும் இருக்கமுடியாது. நல்லவனாகவும் இருக்கமுடியாது"

இரு பட்டங்கள் வானில் பறக்கின்றன. அவற்றின் நூல் நுனியை கீழிருந்து இரண்டு சிறுவர்கள் இயக்கிக் கொண்டிருக்கின்றார்கள். காற்று எனும் நண்பனின் துணையோடு பட்டங்கள் பறக்கின்றன. அதில் ஒருபட்டம் இவ்வாறு கூறுகிறது "காற்று எனும் நண்பன் நான் இன்னும் மேலே பறந்து வானத்தை தொட்டு விட உதவி செய்கிறான். ஆனால் கீழே இருப்பவனோ என்னைவிடாது தடுக்கின்றான். இவன் ஒரு நண்பனா? எனத் திட்டத் தொடங்கியது. மற்ற பட்டம் கூறியது அவன் கீழிருந்து எம்மை இயக்குவதால் தான் எம்மால் அழகாக பறக்க முடிகிறது என்று கூறியது. நான் சுதந்திரமாக பறக்க ஆசைப்படுகின்றேன் என்றது மற்ற பட்டம். சற்றுநேரத்தில் வேகமாக வீசிய காற்றில் சுதந்திரமாக பறக்க விரும்பிய பட்டத்தின் வால் காணாமல் போனது. இன்னும் சற்றுநேரத்தில் தன் உறுப்புக்களை எல்லாம் ஒவ்வொன்றாக இழந்து மடிந்தே போனது.

நாம் விரும்பும் சுதந்திரம் என்ன? என்னை யாரும் கட்டுப்படுத்தாத வாழ்க்கைதான் சுதந்திரம். எனக்குப் பிடித்ததை எனக்கு விருப்பமான நேரத்தில் செய்வதுதான் எனக்கு சுதந்திரம். ஆனால் உண்மையில் சுதந்திரம் என்பது நான் விரும்புவதையெல்லாம் செய்வதன்று. மாறாக நான் செய்யவேண்டியதைப் பொறுப்புடன் செய்வதாகும். ஆனால் நாம் எமது கடமைகளைப் பொறுப்புடன் செய்து சுதந்திரமாக வாழ்கின்றோமா? நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு பலவேளைகளில் எமது சூழ்நிலைகள் சமுதாயம் பெரியோர் மதக்கோட்பாடுகள் என்பவை பெரும் முட்டுக்கட்டைகளாகத் தோன்றுகின்றன. சிலர் நன்மைக் கருதி அமைதி காக்கின்றனர். பலர் வழிமாறி வாழ்க்கைத் தடுமாறி மாண்டு அழிகின்றனர். உண்மைச் சுதந்திரம் எதுவென நாம் நன்கு அறிந்துக்கொண்டால் வாழ்க்கையில் எந்தவொரு குழப்பமும் ஏற்பட வாய்ப்பிருக்காது.

சுதந்திரம் என நாம் பேசும்போது முதலில் நாம் மனதில் வைத்துக் கொள்ளவேண்டியது நமது ஆழ்மனச் சுதந்திரத்தைத்தான். நாம் எப்போது ஆழ்மனச் சுதந்திரத்தை அடைகின்றோம்? நேர்மையான பொறுப்புள்ள கடமைப்பண்புள்ள வாழ்க்கையை வாழும்போதே ஆகும். குடும்பத் தலைவனொருவன் குடி போதை என பல தீயப்பழக்கங்களுக்கு தன்னை அடிமைப்படுத்தும்போது தன் குடும்பத்தை வழிநடத்தும் சக்தியை இழந்து பொறுப்பற்ற வாழ்க்கையினால் தனது சுதந்திரத்தை இழந்துவிடுகின்றான். இதுபோன்றுதான் அனைத்து பொறுப்பு நிலையிலுள்ளவர்களும் தமக்கு கொடுக்கப்பட்ட பணியை நேர்மையாக உண்மையாக வாழத் தவறும்போது தமக்கு கிடைத்த சுதந்திரத்தை இழந்துவிடுகின்றனர். வாழ்க்கையை நாம் சற்று உற்றுநோக்கினால் மனிதர்களாக பிறந்த நம் ஒவ்வொருவரிடமும் சில குறைபாடுகள் இயலாமைகள் இருக்கத்தான் செய்யும்.

நாம் வாழும் சமுதாயத்தில் சுற்றுப்புறச் சூழல்கள் நம்மைச் சிலவரையறைக்குள் உட்படுத்துகின்றன. இவை அனைத்தையும் உணர்ந்து செயற்படவேண்டும். நமது சுயநல தேவைகளை மறந்து மற்றவர்களின் சுதந்திரத்தையும் மதித்து வாழவேண்டும். இதுவே உண்மையான சுதந்திர வாழ்விற்கு இலக்கணமாக அமையும். "ஒருவன் தான் பெற்ற சுதந்திரத்தை மற்றவர்களுக்கும் அளிக்க மறுத்தால் அவன் தீயவன்" என ஓர் அறிஞர் கூறுகிறார்.

எமது இலங்கைத் தாய் நாடு சுதந்திரமடைந்து 71 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன. ஆனால் எமது சுதந்திரம் எங்கே? நாம் சுதந்திரமாக வாழ்கின்றோமா? எமது தாய் நாட்டின் சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றோமா? அல்லது சுவாசிக்கத் தவறிவிட்டோமா? எமது கடமைகள் பொறுப்புக்களை நீதியோடும் உண்மையோடும் சரிவர நிறைவேற்றாது எமது சுதந்திரத்தை தொலைத்துவிட்டோமா? என சற்று சிந்தித்துப் பார்ப்போம். எமது சுதந்திரம் எமது கையில். எனவே நாம் தவறவிட்ட கடமைகள் பொறுப்புக்கள் எல்லாவற்றையும் ஒருகணம் சிந்தித்துப் பார்த்து நேர்மையோடும் உண்மையோடும் வாழ ஆசைப்படுவோம். சுதந்திரமாக வாழத்தொடங்குவோம் இன்று.

**இறையாசீருடன் ஆசிரியர்**




## இறைமகன் இயேசுவை கோயிலில் காணிக்கையாக அர்ப்பணித்தல்.

**விவிலியப் பார்வையில் : மலா 3:1-4**

"லேவியின் புதல்வரைத் தூய்மையாக்கிப் பொன், வெள்ளியைப்போல் அவர்களைப் புடமிடுவார். அவர்களும் ஆண்டவருக்கு காணிக்கை கொண்டு வருவார்கள். பண்டைக் காலத்தில் முன்னைய ஆண்டுகளில் இருந்தது போல் யூதாவின் காணிக்கையும் எருசலேமின் காணிக்கையும் ஆண்டவருக்கு உகந்தனவாய் இருக்கும்".

**புதிய ஏற்பாடு : லூக் 2:20-40**

மோசேயின் சட்டப்படி தூய்மைச் சடங்கை நிறைவேற்றவேண்டிய நாள் வந்தபோது குழந்தை இயேசுவை ஆண்டவருக்கு அர்ப்பணிக்க அவரின் பெற்றோர்களான தூய யோசேப்பும், அன்னை மரியாவும் எருசலேம் ஆலயத்திற்கு கொண்டு சென்றார்கள்.

**பழைய ஏற்பாட்டில் :** வி.ப 1:32இல் கூறியுள்ளபடி, "தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய்" எனும் கடவுளின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக சென்றார்கள். மேலும் அச்சட்டத்தில் கூறியுள்ளபடி, இரு மாடப்புறாக்கள் (அது) இரு புறாக் குஞ்சுகளை அவரின் பெற்றோர்கள் பலியாகக் கொடுக்க வேண்டும்.

**புதிய ஏற்பாடு** லூக் 2:22-40 ஆலயத்திற்கு செல்லும்போது நிகழ்ந்ததாவது; சிமியோன் என்ற வயது முதிர்ந்தவர் தூய ஆவியின் தூண்டுதலால் ஆலயத்திற்கு வந்து அன்னை மரியாவிடமுள்ள குழந்தை இயேசுவைக் கரமேந்தி கடவுளைப் போற்றித் துதித்தார். அவர் "ஆண்டவருடைய மெசியாவைக் காணும் முன் சாகப்போவதில்லை" என்று தூய ஆவியால் உணர்த்தப்பட்டிருந்தார்.

சிமியோன் இறைவாக்காக முன்னுரைத்தது, தமது கையில் குழந்தை இயேசுவைத் தாங்கி, "ஆண்டவரே, உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில், மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுகொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு வெளிப்பாடு அருளும் ஒளி; இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை" என்று முன்னுரைத்தார்.

பானுவேல் என்ற மூத்த பெண் உரைத்தது : இவர் ஆசேர் குலத்தைச் சேர்ந்தவர். இவரும் குழந்தை இயேசுவைக் குறித்து, கடவுளைப் புகழ்ந்து எருசலேமின் மீட்புக்காகக் காத்திருந்த எல்லாரிடமும் கூறிவந்தார்.

### சிமியோன் குழந்தை இயேசுவின் தாய் மரியாவைக் குறித்துக் கூறியது.

சிமியோன், பெற்றோர்கட்கு ஆசி கூறியபின், மரியாவை நோக்கி, "இதோ, இக்குழந்தை இஸ்ரயேல் மக்களுள் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும் எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும். பலருடைய மறைவான எண்ணங்கள் வெளிப்படும். உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" என்றார்.


**குழந்தை இயேசுவின் பெற்றோர் :** குழந்தையைக் குறித்துக் கூறியவை பற்றி அவரின் தாய், தந்தை மிகவும் வியப்புற்றனர்.

**ஆண்டவருடைய திருச்சட்டம் நிறைவேறுதல் :** ஆண்டவருடைய திருச்சட்டப்படி எல்லாவற்றையும் செய்துமுடித்த பின்பு அவர்கள் தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். குழந்தையும் வளர்ந்து, ஞானத்தால் நிறைந்து கடவுளுக்கு உகந்தவரானார்.

**முடிவாக :** அன்புள்ளங்களே! ஆண்டவர் இயேசுவைக் காணிக்கையாக எருசலேம் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கும்போது, இரு குல மூத்தவர்களால் அடையாளப்படுத்தப்படுகிறார். இறைமகன் என்றாலும் கடவுளின் திருச்சட்டத்தின்படி எல்லாவற்றையும் நிறைவேற்றுகின்றார். நமக்கும் இந்நிகழ்வு விழிப்பு, உண்மை, திருச்சபையின் சட்டங்களை நிறைவேற்றுவதில் ஆர்வம், எந்நிலையில் இருந்தாலும் இறைவனுக்கு அர்ப்பணிக்க, காணிக்கையளிக்க மனநிறைவு கொள்ளல். சிமியோன், அன்னா போன்ற மூத்தவர்கள் இயேசு யாரென அறிக்கையிடுகிறார்கள். அவர்கள் ஆவியின் தூண்டுதலுக்குப் பணிந்தனர். நாமும் உண்மையின் ஆவியைப் பெற்றவர்களாய் வாழ்வோம். இறை உறவில் ஏழை, எளியவரோடு சங்கமிப்போம். வாழ்வியல் சாத்தியமாக்கி பயணிப்போம்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# லங்கா மாதாவும் சுதந்திர தினமும்

"சுதந்திரம் என்பது பிறப்புரிமை அது இறைவன் நமக்களித்த வரம். காரணம் இறைவன் மனிதனை முழு சுதந்திர மனிதனாகவே படைத்திருக்கின்றார். மனிதனும் ஒரு சுதந்திர விரும்பி. அவனும் சுதந்திரமாகவே வாழ ஆசைப்படுகின்றான். ஆனால் அவன இன்று அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளான்.

**இன்று மனிதன்**
**பணத்திற்கு அடிமை**
**பதவிக்கு அடிமை**
**பெண்ணுக்கு அடிமை**
**அன்புக்கு அடிமை**
**பொன்னுக்கு அடிமை**
**சொத்துக்கு அடிமை**

என்று சொல்லிக்கொண்டே போகலாம். இதிலிருந்து மனிதர் விடுபடவேண்டும். வாழ்வில் யாதார்த்த நிலைகளுக்கு அவர் மாறவேண்டும் இல்லையேல் வாழ்க்கையே போராட்டமாகத் தான் இருக்கும். அக விடுதலையும் கிடைக்காது, புற விடுதலையும் கிடைக்காது. ஆக அக, புற விடுதலையை நாம் பெற நம் விடுதலையின் நாயகன் இயேசு கிறிஸ்து நமக்கு வாழ்ந்து காட்டியிருக்கின்றார்.

நமது விடுதலையின் நாயகன் இயேசு சுதந்திரத்தின் எல்லாப் பரிமாணங்களையும் வாழ்ந்து காட்டினார். இத்தகைய வாழ்வில் வரும் துன்பங்கள், துயரங்கள், மனவருத்தங்கள், அனைத்தும் சாவையும் கடந்தவை என்று உயிர்ப்பினால் உறுதிப்படுத்தினார். இத்தகைய ஒரு நம்பிக்கையை விசுவசித்து வாழ்ந்து காட்டியதால் உலக அரசியாக எமது நாட்டின் பாதுகாவலியாக லங்கா மாதா திகழ்கின்றாள். எனவே இலங்கையர்களாகிய நாம் ஒவ்வொருவரும் சாதி, சமய, கலாச்சார, மற்றும் இன பேதங்களைக் கடந்து முழு மனித விடுதலைக்காக உழைக்க அழைக்கப்படுகின்றோம்.

மேற்கூறப்பட்ட அடிமை நிலையில் இருந்து விடுபட இத்தகையை ஒரு அழைப்பு வாழ்வுக்கு சமயமும், அரசியலும் ஒன்றை ஒன்று நிறைவு செய்ய வேண்டும். எனவே அவரவர் சமயம் தரும் ஆன்மீகப் பயிற்சிகளின் அடிப்படையில் சமய அடிப்படைவாதங்களைக் கடந்து பொறுப்புள்ள, உண்மையுள்ள குடி மக்களாக வாழ முயற்சிப்போம். அன்று இரண்டாம் உலகப் போரின்போது என்ன நடக்குமோ என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்த வேளையில் 1942ம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு அன்று ஜப்பானியர் குண்டு வீச்சு விமானங்கள் நமது நாட்டின் மீது வந்து குண்டு வீசியது இக்குண்டுகள் முதலில் கொழும்புத் துறைமுகத்திலும் பின்னர் திருகோணமலைத் துறைமுகத்திலும் வீழ்ந்தன. மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. இருப்பினும் மக்கள் மிகவும் பீதியடைந்திருந்தனர். இதனைக் கண்ணுற்ற அப்போதைய பேராயர் மசோன் அன்னை மரியாளை நோக்கி வேண்டுதல் செய்தார். இப்போரின் அபாயத்தில் இருந்தும், குண்டு வீச்சில் இருந்தும் இலங்கையையும் இலங்கை வாழ் மக்களையும் பாதுகாத்தால் அதற்கு பிரதியுபகாரமாக அன்னைக்கு ஒரு பிரமாண்டமான "பசிலிக்கா" ஒன்றைக் கட்டுவதாக வாக்குறுதி அளித்தார். அதன் அடிப்படையில் எம் மக்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படவில்லை.

எனவே அன்றைய பேராயரும் அவரைத் தொடர்ந்து வந்த பேராயர் தோமஸ் கர்தினால் கூரே அவர்களும் இப்பசிலிக்காவை இந்நிலைக்கு கொண்டு வந்தனர். 1847ம் ஆண்டு மாசி மாதம் 05ம் திகதி தேவத்தையில் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் மத்தியில் பேராயர் மசோன் திருத்தந்தையின் அறிவுரைப்படி அன்னை மரியாளை லங்கா மாதா என்றும் அவளே எமது நாட்டின் பாதுகாவலியும் என்றும் பிரகடனப்படுத்தினார். ஆகவேதான் எம் மக்களைப் பாதுகாத்து சுதந்திரமாக வாழச் செய்த லங்கா மாதாவிற்கும் இந்த சுதந்திர தினத்திலே விழா எடுத்துக் கொண்டுடாடுகின்றோம்.

இன்று நம் அன்னை, எம் நாட்டின் பாதுகாவலி, லங்கா மாதா நமக்கு விடுக்கும் சுதந்திரச் செய்தி சுதந்திர நாட்டில் அடிமைத்தன்மையின் ஆணி வேரைக்களைவதாகும். அடிமரத்தின் வேரில் இருக்கும் பூச்சிகளைக் களையாமல் கிளைகளுக்கு மருந்தடிப்பது விடுதலை சுதந்திரம் அன்று. ஒருவன் தன்னிடம் இருக்கும் அதிகாரத்தை அடுத்திருப்பவன் கையில் கொடுப்பது உண்மைச் சுதந்திரம் அன்று. மாறாக அடிப்படையில் மாற்றம் உதயமாகி அது சமூகத்தில் தழைத்தோங்க காயாகிக் கனியாகிப் பயன்தருவதே உண்மைச் சுதந்திரம், விடுதலையாகும். இருப்பதைப் பதுக்குவது விடுதலை அல்ல. பகிர்வதே உண்மை விடுதலை. அடிமைப்படுத்துவது விடுதலை அன்று. அடிமையைத் தலைத்தூக்க வைப்பதே விடுதலை.

இன்று நாம் பெற்ற விடுதலை முழுமை பெற வேண்டுமானால் வறுமையில் இருந்து, ஏழ்மையில் இருந்து இனக் கொடுமையில் இருந்து, பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்து விடுபட வேண்டும். இறைமகன் இயேசு இறுதி மூச்சு வரை போராடியது போல் விடுதலை என்பது நிறைவு பெற்றுவிட்டது என்று அல்ல இது ஒரு தொடர்கதை தொடர் நிகழ்வு, தொடர் போராட்டமாகும். பந்தம், பாசம், நேசம், அன்பு, பகிர்வு, போன்ற பண்புகளுக்குள் நாம் சிறைப்படுத்திக் கொண்டு இவைகள் நிறைவு பெறப் போராட வேண்டும்.

அன்னை மரியாளைப் போல், அடிமையைக் கடைக்கண் நோக்க வேண்டும். சமத்துவம், அமைதி, சுதந்திரம் பெறப் போராடி இரத்தம் சிந்திய தியாகிகளைப் போல் வாழக் கற்றுக் கொள்வோம். கடந்த கால கருத்து வேறுபாடுகளைக் களைந்து எதிர்காலச் சிறகுகளுக்குள் சிறைப்பட்டுக் கொள்வோம். புரட்சிக் கவிதை பாடும் புதுமைக் குயில்களாக, சிந்தனையில் நடமாடும் சிங்கார மயில்களாக, கருமையாக இருந்தாலும் ஒருமித்து வாழும் காக்கைகளாக, சமாதானத்தின் சின்னமாக சிறகடித்துப் பறக்கும் அமைதிப் புறாவாக வாழ்வோம். அன்னை மரியாள் பாடிய விடுதலையின் கீதம் நமது இறுதி மூச்சுவரை நம் இதயத்துக்குள் இருக்கட்டும் எமக்கு கிடைத்த சுதந்திரத்தை பேணிக் காப்போம்.



# மசபியேல் குகைதனில் உதித்திட்ட ஒளிச்சுடர்

**உலகமெல்லாம் போற்றும்**
**மசபியேல் குகைதனில்**
**உதித்திட்ட ஒளிச்சுடரே**
**உமக்கே எம் வணக்கம்!**

பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் 1858ம் ஆண்டு மாசி 11 முதல் 1858 ஆடி 16 வரை புனித பெர்னதெத் சூபிரூஸ் என்ற பதின்நான்கு வயது பெண்ணுக்கு அன்னை மரியா அளித்த காட்சியின் அடிப்படையில் அவருக்கு தூய லூர்து அன்னை என்ற பெயர் வழங்கப்படுகிறது.

உலகின் பல்வேறு இடங்களில் மரியன்னை அளித்த சிறப்பு வாய்ந்த காட்சிகளில் ஒன்றாக லூர்து நகர் காட்சியும் விளங்குகின்றது. லூர்து நகரில் அன்னை காட்சி கொடுத்ததை நினைவுகூர்ந்து லூர்து அன்னையின் திருவிழாவை மாசி 11ஆம் திகதி திருச்சபை கொண்டாடி மகிழ்கின்றது.

பிரான்ஸ் நாட்டின் லூர்து நகரில் பிறந்தவர் பெர்னதெத் சூபிரூஸ், 1858ஆம் ஆண்டு ஒரு நாள் இவர் தன் சகோதரி மற்றும் தோழியுடன் விறகு பொறுக்கச் சென்றார். அவர்கள் மசபியேல் குகை அருகே சென்று கொண்டிருந்த வேளையில் பெர்னதெத் ஒரு காட்சியைக் கண்டார்.

அன்னை மரியா வெண்ணிற ஆடையும், முக்காடும் அணிந்து ஓர் இளம் பெண்ணாக அந்தக் குகையில் தோன்றினார். நீல நிறத்தில் இடைக் கச்சையை உடுத்தியிருந்தார். கையில் முத்துக்களால் ஆன செபமாலை வைத்திருந்தார். அவரது காலடியில் காட்டு ரோசாச் செடிகள் காணப்பட்டன. அவர் கைகளைக் கூப்பி வானத்தை நோக்கியவாறு இருந்தார். அவருடைய இத்தகு காட்சி பெர்னதெத் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது. அவரது சகோதரிக்கும் தோழிக்கும் எதுவும் தெரியவில்லை.

பெர்னதெத் அன்னையின் முதல் காட்சியைக் கண்டபோது மரியா அவரை மேலும் சில நாட்கள் இதே இடத்திற்கு வரச் சொன்னார். அன்னையின் வார்த்தையை ஏற்று பெர்னதெத்தும் அங்கு சென்றார். மாசி 18ஆம் திகதி அன்னையைக் கண்ட பெர்னதெத் பரவச நிலையில் இருந்ததை அவரோடு சென்றவர்கள் கண்டனர். மேலும் ஒரு காட்சியில் அன்னை தனக்கு அங்கு ஓர் ஆலயம் கட்டப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

பெர்னதெத் அதைத் தன் குருவிடம் கூறியபோது, அவர் அதற்கான காரணத்தை அறிந்து வருமாறு கூறினார். பின்பு மாசி 25ஆம் திகதி காட்சியின் போது மரியாவின் கட்டளையை ஏற்று பெர்னதெத் மண்ணைத் தோண்டியபோது, அந்த இடத்தில் நீரூற்று ஒன்று தோன்றியது. அது பின்பு நீரோடையாக மாறி திருப்பயணிகளைக் கவர்ந்திழுக்கும் அற்புத இடமாக இன்றும் திகழ்கின்றது. நம்பிக்கையோடு அந்த நீரைப் பருகுவோர்க்கு குணமளிக்கும் மருந்தாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும் அன்னை மரியா காட்சியளித்த மசபியேல் குகையின் அருகே மரியாவின் பெயரில் பெரிய ஆலயம் ஒன்று கட்டி எழுப்பப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் உலகெங்கும் இருந்து இலட்சக்கணக்கான திருப்பயணிகள் லூர்து அன்னைப் பேராலயத்தைத் தரிசித்து வருகின்றனர்.

திருத்தந்தை 9ம் பயஸ் மரியாவின் அமல உற்பவத்தை 1854ம் ஆண்டு மார்கழி 8ம் திகதி விசுவாசக் கோட்பாடாக அறிவித்தார். இதை உறுதி செய்யும் வகையிலேயே அன்னை மரியா லூர்து நகரில் 1858இல் காட்சியளித்து, “நானே அமல உற்பவம்” என்று கூறியுள்ளார். மேலும் 1858இல் கார்த்திகை மாதம் அன்னை அளித்த 17 காட்சிகளைப் பற்றி ஆராய விசுவாசக் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இறுதியாக 1862இல் தை 18ம் திகதி டர்பெஸ் மறைமாவட்ட ஆயர் லாரன்ஸ் பெர்னதெத் சூபிரூஸ்க்கு அன்னை மரியா அளித்த காட்சிகளை உறுதிப்படுத்தினார். திருத்தந்தை 9ம் பயஸ் லூர்து அன்னையின் வணக்கத்திற்கு அனுமதி வழங்கினார். இதன் மூலம் லூர்து நகர் இன்றளவும் அன்னை மரியாவின் பக்தர்கள் வந்து செல்லும் புனித இடமாக உள்ளது.

மொத்தம் பதினெட்டு முறை பெர்னதெத்துக்குக் காட்சியளித்த மரியன்னை, அவற்றில் பதினைந்து காட்சிகளில் செபமாலையின் மகிழ்ச்சி, துயரம், மகிமை மறைபொருள்களின் பதினைந்து மறையுண்மைகளையும் நாளுக்கு ஒன்று என்ற வகையில் பெர்னதெத்தை தியானித்து செபிக்கக் கற்றுக்கொடுத்தார்.

சித்திரை 7ஆம் திகதி பெர்னதெத் பதினாறாவது காட்சியைக் கண்டபோது, மருத்துவ ஆய்வுக்கான இவர் கையை 15 நிமிடங்கள் தீயினால் சுட்டுள்ளனர். ஆனால், பெர்னதெத் அதை உணரவும் இல்லை, இவர் கையில் தீக்காயமும் ஏற்படவில்லை. ஆனி 16ஆம் திகதி அன்னை மரியின் கடைசி காட்சியைக் கண்ட பெர்னதெத் “இதற்கு முன்பாக நான் அவரை இத்தகைய பேரழகோடு கண்டதே இல்லை” என்று கூறியுள்ளார்.

இந்த லூர்து காட்சியின் நினைவாகத்தான் உலகம் முழுவதும் உள்ள கத்தோலிக்க ஆலய



**லூர்து அன்னை திருவிழா**
**மாசி 11**

வளாகங்கள் பலவற்றிலும் லூர்து அன்னை காட்சியளித்த குகை வடிவப் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. குகை என்பதன் பழைய தமிழ் வார்த்தையான கெபி என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

இவ்வாறு அன்னை மரியா தம் அன்புப் பிள்ளைகளின் ஈடேற்றத்திற்காக பல்வேறு காலக்கட்டங்களில், பல்வேறு இடங்களில் உலகில் தோன்றி, செபம், தவம், செபமாலையின் அவசியத்தை உணர்த்திச் சென்றுள்ளார். இன்றும் நம்மோடு, ஆரோக்கிய அன்னையாக, ஜெபமாலை அன்னையாக, சகாய அன்னையாக அவர் பெயர் கொண்ட திருத்தலத்தில் நாள்தோறும் தம்மைக் காட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறார். தன்னை நாடி வருவோர்க்கெல்லாம் வாரி வழங்கி வருகிறார். அன்னையின் அறிவுரையை ஏற்று நாள்தோறும் செபமாலையைத் தியானித்து இறைவனுக்கு ஏற்புடையவர்களாக மாறுவோம். அதன் மூலம் அன்னையின் அபரிமிதமான அருளைப் பெற்று இன்புடன் இனிதே வாழ்வோம்.

## ஆன்ம வாழ்வுக்குப் பயன்தரும் அறிவுரைகள் - 02

# தன்னைப் பற்றித் தாழ்மையாக எண்ணுதல்

- இயல்பாக மனிதன் அறிவை விரும்புகிறான். ஆயினும் இறைபயம் இல்லாத அறிவால் என்ன பயன்?
- தனது ஆன்மாவை மறந்து, கோளாக்களின் போக்கை ஆராய்ச்சி செய்யும் செருக்குள்ள விஞ்ஞானியைவிட, இறைவனுக்குப் பணிசெய்து வாழும் குடியானவன் சிறந்தவன்.
- தன்னை நன்றாக அறிந்தவன் தன்னையே பழிக்கிறான். மனிதரின் புகழுரைகளிலும் அவன் இன்பம் கொள்வதில்லை.
- அவனியில் உள்ள அனைத்தும் அறிந்திருப்பினும், உன்னிடம் அன்பு இல்லையென்றால் உன் செயல்களுக்கு ஏற்ப நீதி வழங்கும் இறைவன்முன் அவற்றால் உமக்கு என்ன பயன்?
- அளவுகடந்த அறிவு வேட்கையை அடக்கிவிடு, ஏனெனில் அதனால் மன அலைவும் ஏமாற்றமும் ஏற்படுகின்றன.
- அறிஞர்கள் ஞானிகளாகத் திகழவும் அவ்வாறே அழைக்கப்படவும் மிகவும் விரும்புகிறார்கள்.
- அறிந்துகொள்வதால் ஆன்மாவுக்கு எந்தப் பயனும் ஏற்படாத, அல்லது குறைந்த பயனே ஏற்படுகின்ற பொருட்கள் பல உண்டு.
- தனது மீட்புக்குத் துணை செய்வனவற்றைப் பற்றிச் சிந்திக்காமல் பிற பொருட்களில் கவனம் செலுத்துகிறவன் பெரும் மூடன்.
- மிகுதியான சொற்கள் ஆன்மாவுக்கு நிறைவு தரா; ஆனால், நல்வாழ்வு மனதிற்குப் புத்துயிர் ஊட்டும்; தூய மனச்சான்றோ இறைவனில் திடமான நம்பிக்கை அளிக்கும்.
- உன் அறிவின் விரிவிற்கும் ஆழத்திற்கும் ஏற்ப வாழ்க்கை அதிக புனிதமாக அமையாவிட்டால், உனக்கு வழங்கப்படும் நீதி கடுமையாகவே இருக்கும்.
- ஆகவே, உனது திறமையை அல்லது அறிவை எண்ணி ஆணவம் கொள்ளாதே. மாறாக, உனக்குத் தரப்பட்ட அறிவை எண்ணி அச்சம் கொள்.
- நீ அதிகம் அறிவு படைத்தவன் என்றும், நன்றாகப் புரிந்து கொள்ளுகிறவன் என்றும் உனக்குத் தெரிந்தால் நீ அறியாதவை இன்னும் அதிகமாய் இருக்கின்றன என்பதையும் அறிந்துகொள்.
- “நீ உன்னை உயர்வாக எண்ணிக்கொள்ள இடமில்லை” (உரோ 11:20, 12:16) ஆனால், உனது அறிவின்மையை ஏற்றுக்கொள்.
- உன்னைவிடக் கல்வியில் உயர்ந்தவர்களும் சட்டத்தில் வல்லுநர்களும் இருக்க, பிறரைவிட உயர்ந்தவனாக உன்னை ஏன் மதிக்கிறாய்?
- பயன்பெறும் வகையில் ஏதாவது அறியவோ, கற்கவோ நீ விரும்பினால், மறைந்து வாழவும் சிறப்பற்றவன் என்று கருதப்படவும் விரும்பு,
- தன்னைப்பற்றி உண்மையாக அறிவதும், தன்னைப் பழிப்பதுமே உண்மை நிறைந்த உன்னத அறிவாகும்.
- தன்னைப்பற்றி எதுவும் கருதாமல் பிறரைப்பற்றி என்றும் நன்றாகவும், உயர்வாகவும் எண்ணுதல் சிறந்த ஞானமும் பண்பும் ஆகும்.
- இன்னொருவர் வெளிப்படையாகப் பாவம் செய்வதை அல்லது பெரும் தீச்செயல் புரிவதைக் கண்ணுற்றால் நீ உன்னைச் சிறந்தவனாகக் கருத வேண்டாம்; ஏனென்றால், நீ நன்மையில் எத்தனைநாள் நிலைத்திருப்பாய் என்பது உனக்குத் தெரியாது.
- நாம் எல்லோருமே வலிமையற்றவர்கள். எனினும், உன்னைவிட வலிமை குன்றியவர்கள் எவருமில்லை என்று நீ எண்ணு.

# மேய்ப்புப்பணி மடல் – இளையோர் ஆண்டு – 2019 – பதுளை மறைமாவட்டம்



**எனதருமை இளையோர்களே, குருக்களே, துறவிகளே, சகோதர, சகோதரிகளே!**

பதுளை மறைமாவட்டத்தில் இவ்வாண்டை இளையோர் ஆண்டாக

## “இளையோர்களே நீங்கள் நிலாவாக இருக்கிறீர்கள் அது இயேசு ஆண்டவர் எனும் சூரியனை உங்களில் பிரதிபலிக்கின்றது”

எனும் கருப்பொருளில் பிரகடனப்படுத்துகின்றோம்.

மகிழ்ச்சி என்பது இளையோர்க்குரிய ஒரு பண்பாகும். சாதாரண இளைஞன் அல்லது யுவதி வாழ்வை ஆடல், பாடல்கள் வழியாக கொண்டாடி வெளிப்படுத்துகின்றார்கள். பொதுவாக யார் தியாகத்தினுடாகவும் ஒழுக்கம் நிறைந்த வாழ்க்கையினூடாகவும் உயரிய எதிர்ப்பார்ப்பை கொண்டு இருக்கின்றார்களோ அவர்கள் பெருமதிமிக்க குறிக்கோளை அடைவார்கள். ஏனையவர்கள் குறைவான சந்தர்ப்பத்தாலும், வலுவின்மையாலும் தங்களுக்குரிய எதிர்நோக்கை அடைய முடியாத, சாதிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையை அடைவார்கள். இன்னும் சிலர் சில பிழையான வழிக்காட்டுதலாலும், துஷ்பிரயோகங்களாலும், தீய பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி சமூக இடர்பாட்டு சூழ்நிலைகளுக்குள் சிக்குண்டு இருப்பது வெளிப்படையான உண்மை. மேலும் சில வாழ்க்கை சூழ்நிலை இளையோர்களை வெறுப்பிற்கும், அடிமைத்தனத்திற்கும், வன்முறைக்கும், ஏன் தற்கொலைக்கும் இட்டுச்செல்கின்றது. ஆனால் நல்ல பெரும்பான்மையான இளையோர் உடல், உள, ஆன்மீக நலன்களில் உயர்ந்து வாழ்க்கை சவாலை சந்திக்கும் தைரியத்தை உடையவர்களாக இருக்கின்றனர். இவர்கள் சமுதாய மாற்றத்திற்காக நம்பிக்கையோடும், விசுவாசத்தோடும் இறைவார்த்தையின் துணைக் கொண்டு செபம், குடும்ப வாழ்வு, குழுவாழ்வு, நல்லுறவு வாழ்வினூடாக செயல்படுகின்றனர்.

இளையோர்கள் நீதியினூடாக சமாதானம், நல்லுறவு போன்றவற்றை ஒப்புறவின் வழியாக நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு நாம் எம் இளையோர்களுக்கு உதவி கரம் நீட்டி உதவி புரிய வேண்டும். இத்தகைய நிலையானது நம்பிக்கையாலும் எதிர்நோக்குடன் கூடிய நல்ல பண்பை எம்மை போன்ற நல்ல மனிதர்களிடம் கண்டுக்கொள்வதோடு எதிர்மறையான வன்முறைகளையும் தவிர்த்தும் கொள்ள வேண்டும். இவற்றை அடைவதற்கு இயேசு ஒருவரே அனைத்துக்கும் மேலான முன்மாதிரிகையாக இருக்கின்றார். அவருடைய வாழ்வு போதனை, பணி இறைவார்த்தை ஊடாக நான்கு நற்செய்திளும், நற்செய்தியாக இவற்றிக்கு பல்வேறு நூற்றாண்டுகளாக சாட்சியம் கூறியவர்கள் இன்று புனிதர்களாக உள்ளனர்.

இளைஞர்கள் தங்கள் சுய உருவாக்கத்திற்கு பொறுப்பாளார்களாக இருப்பதுடன் வளர்ந்தோரும், இவர்களின் உருவாக்கத்திலும், நன்நடத்தை நெறியில் கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும். சமூதாயத்தில் நல் விழுமியங்களை வாழும் பொழுது, இயேசுவுக்கும் அவரது வழிக்கும், படிப்பினைகளுக்கும் இடம் கொடுக்கிறோம். இயேசு ஆண்டவரை தேடி வந்த இளைஞன் “இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?” என்பதற்கான விடையை கான முயன்றான் ஆனால் முழுமன சுதந்திரத்துடனும், முழு மன அமைதியுடனும் இயேசுவின் அழைப்பிற்கு விடை கொடுக்க முடியாததால் மிகுந்த துக்கத்துடன் சென்றான் (காண்க. மத்.19:16-22 மாற்.10:17-31 லூக்.18:18-30). இயேசு அவனுக்கு காட்டிய அன்பை அவனால் கண்டு உணர முடியவில்லை (மாற்.10:21).

இளைஞர்களுக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கும் வாழ்வின் குறிக்கோள்களும், இலக்குகளும், தேவைகளும் அவர்களை வலிந்து வேறு திசைகளுக்கு இன்று இட்டு செல்பவை எவை? பொருள் சார்ந்த உலகம் இளைஞர்களுக்கு பல சலுகைகளை கொடுக்க முயல்கின்றது. ஆனால் இயேசு ஆண்டவர் மிகுதியான வாழ்வை கொடுக்க முயல்கின்றார். இது மிகவும் பிரதானமானதாகும். ஆகவே மறைக்கப்பட்டிருக்கும் புதையல்களை மிகுந்த விலை கொடுத்து வாங்கி கொள்ள வேண்டும் (காண்க. மத்.13:44- 45 மாற்.6:19-21). இறைவார்த்தையால் வழிநடத்தப்படும் இளைஞர்களாக இவ்இளையோர் ஆண்டில் பயணிப்போம். இதற்கு குருக்கள் சகிதமாக தனித்துவமான தார்மீக கடமையுடன் இளைஞர்களை சுற்றி வலம்வருவோம். அத்துடன் துறவறத்தோர், குருக்களுடன் இணைந்து செயல்படுவோம். இளையோர்கள் உத்துவேகத்துடன், செயற்திறன்மிக்கதாக, முன்நின்று செயற்படும் இளையோர்க்குரிய அடையாளத்தை இறைவார்த்தையின் ஒளியில் தேடுவதற்கும், பகிர்வதற்கும் முன்வர வேண்டும்.

மேலும் இயேசுவால் குறிப்பிடப்படும் நபர் ஊதாரி பிள்ளையின் உவமையில் வரும் ஊதாரி பிள்ளை ஆவார் (லூக்.15:11-20). இவர் தனது வீட்டின் முழு அன்பிலிருந்தும், குடும்ப அரவணைப்பிலிருந்தும், வெளியேறி சுதந்திரமாக வாழ்வை கொண்டாட, தனக்கு விரும்பியதை செயல்படுத்த முயற்சிப்பதைக் காணுகின்றோம். இச்சைகளுக்கு இணங்கி நற்சிந்தனைகளுக்கு செவிமடுக்காமல் திருஅவையின் படிப்பினைகளை, போதனைகளை பின்பற்றாத நிலையினால் ஏற்பட்ட விபரீதத்தை இயேசு இங்கு காண்பிக்கின்றார். இங்கு ஆதரவற்ற நிலையையும், தனிமையையும், மக்களால் புறம் தள்ளப்பட்ட நிலையை அட்டை போல் தவறாக ஒட்டி கொண்டு இருக்கும் நபர்களின் செயற்பட்டை இங்கு சுட்டிக் காட்டுகின்றார். ஆனால் இவ்வுலகில் ஒருவர் மாத்திரமே எம்மை விண்ணுலகில் வரவேற்பதற்கு ஆயத்தமாக இருப்பர். ஏனெனில் உங்கள் விண்ணக தந்தையின் அன்பு என்றுமே குறைவுபடாதது.

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் “உலக இளையோர்” தினத்தில் (ஐப்பசி 2017) இளையோர்க்கு செவிமடுத்து அவர்கள் ஆழத்திற்கு சென்று தம்மை அறிவதற்கான பணியில் ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து பெற்றோர்க்கும், ஆசிரியர்களுக்கும், பெரியவர்களுக்கும், குருக்களுக்கும், துறவிகளுக்கும், அறைகூவலை விடுத்தார்.

மகிழ்ச்சியான உயரிய நோக்கத்திற்காக செயற்திறன் மிக்க வாழ்க்கை வாழ்வதற்காக தங்களுடைய முற்சிகளையும், ஆற்றல்களையும், அர்பணிப்புகளையும், தியாகத்தோடு மேற்கொண்டு வருகின்ற இளையோரை நாம் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இயேசுவின் அன்புச்சீடர் புனித யோவான் இருமுறை அழுத்திச்சொல்வார், சீடத்துவத்தின் பலம் இளையோரில் தங்கியுள்ளது. “எனவே உங்களுக்கு எழுதுகின்றேன் தீயோனை நீங்கள் வென்றுள்ளீர்கள்... கடவுளின் வார்த்தை உங்களுள் நிலைத்திருக்கின்றுது் இறைவார்த்தை உங்களில் குடியிருக்கச்செய்துள்ளீர்கள் தீமையை வென்றுள்ளீர்கள்” (1யோவான் 2:13-14).

உலக இளையோர் தினத்தை தொடங்கி வைத்தவரும் தற்போது புனிதருமான திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் “சமாதானமும், இளைஞர்களும் ஒன்றாக பயனிக்க வேண்டும் என வலியுறுத்திக் கூறுவார். எதிர்காலம் என்பது இளையோரின் கையில் உள்ளது. மேலும் அது அடிப்படைத்தேர்வுகளிலும், அவர்கள் மேற்கொள்ளுகின்ற அத்தியாவசிய மதிப்பீடுகளிலும் அவர்களின் வாழ்வு இணைக்கப்பட்டுள்ளது. உங்களுடைய இளமை பருவத்தை கண்டு பயப்பட வேண்டாம்” என்று கூறுகின்றார் (உலக இளையோர் ஆண்டு-1985).

இன்றைய உலகம் பல்வேறு வகையான கவர்ச்சிமிக்க நிகழ்ச்சிகளை பிரகாசிக்கச் செய்து இளையோரின் உணர்ச்சிகளை, பாதிக்கப்படக்கூடிய தன்மைகளையும், பசியையும் மளுங்கடிக்கச் செய்கின்றது. சமூக தொலைத்தொடர்பின் தவறான பயன்பாடு இளையோரில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. சில இளையோர் மற்றவர்களின் இவைபோன்ற தொடர்புச்சாதனங்களின் நெருக்குதலினால் தம்மை அறியாமலே இரையாக்கப்படுகின்றனர். இருந்தும் திருச்சபை, பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட ரீதியாக தம்முடைய வாழ்வை முழுமையாக அர்ப்பணிக்கவும் அர்த்தமுள்ள செயற்பாட்டில், நிகழ்ச்சிகளில் பங்குபெற இவ் இளையோரை அழைக்கின்றது. இளையோர்க்குரிய. சிலுவைப்பாதை, தியான வழிபாடு, பவனிகள், இருப்பிட செயல்அமர்வுகள், முகாம்கள், கலைகலாச்சார நிகழ்வுகள், இரத்ததானம், தன்னார்வப்பணிகள், போட்டி நிகழ்வுகள் இளையோர் ஒன்றிய செயற்பாடுகள், உளவியல் ஆற்றுப்படுத்தல் போன்றவை இவர்களை வலுவூட்டும்.

சுதந்திரத்தை விரும்பும் அன்பார்ந்த இளையர்களே! இச்சுதந்திரத்தை யாரிடம் காணமுடியும்? எம்பெருமான் இயேசுவிடத்தில் மட்டும்தான் காணமுடியும். “மகன் உங்களுக்கு விடுதலை அளித்ததால் நீங்கள் உண்மையிலே விடுதலை பெற்றவர்களாய் இருப்பீர்கள்” (யோவான் 8:36). இறுதியாக மரியன்னை குறிப்பிட்டவாறு “அவர் உங்களுக்கு சொல்வதையெல்லாம் செய்யுங்கள்” (யோவான் 2:5), என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

இறையாசீர் உங்களோடு இருப்பதாக.

கிறிஸ்துவில் அன்புள்ள

**மேதகு ஆயர் J. வின்ஸ்டன் பர்னாந்து, S.S.S**

**மரியன்னை இறைவனின் தாய் பெருவிழா தை 1, 2019 அன்று ஆயர் இல்லத்திலிருந்து இச்சுற்றுமடல் வெளியிடப்பட்டது.**





## இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

### பொதுக்காலத்தின் 4வது ஞாயிறு (03.02.2019)

**பேதுரு**

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 4வது வாரத்தை தொடங்க இறையருளை வேண்டி ஆவலுடன் ஆண்டவர் இல்லம் வந்திருக்கும் அன்புத் திருஅவையின் இறைமக்களே! இறைவனின் அழைப்பு என்றால் என்ன? இன்று நாம் எவ்வாறு இறையழைத்தலைப் புரிந்து கொண்டுள்ளோம். அழைப்பினால் வரும் சவால்களை எவ்வாறு சந்திக்கப்போகின்றோம்? என்ற கேள்விகளுக்கெல்லாம் இன்றைய வாசகங்கள் விடைதருகின்றன. நாம் ஒவ்வொருவரும் ஒரு பணிக்காக அழைக்கப்பட்டுள்ளோம். பணி வாழ்வு என்பது இறைவனுக்கு சான்று பகரும் வாழ்வா-கும். எரேமியா இறைவாக்கினர் தனது பணி வாழ்வில் தளர்வுற்றபோது, கடவுள் உடனிருந்து அவரைத் திடப்படுத்துகின்றார். முதல் வாசக-த்தில் “அச்சம் கொள்ளாதே நான் உன்னை அஞ்சவிடமாட்டேன்” என்ற வார்த்தையை நாம் கேட்கின்றோம். நாம் நம்முடன் வாழும் திறமை-யுள்ளவர்களை ஏற்றுக்கொள்கின்றோமா? அல்லது பாராட்டுகின்றோமா? இல்லை இன மத மொழி வேறுபாடுகளினால் ஏற்றுக்கொள்ளத் தயங்கு-கின்றோமா? அல்லது இயேசுவைப் போல் அனைத்-தையும் சமாளித்து பணி வாழ்வில் வெற்றி பெறுகின்-றோமா? சிந்திக்க பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எரோ 1:4–5,17–19**

மக்களினங்களுக்கு இறைவாக்கினராக உன்னை ஏற்படுத்தினேன்.

**பதிலுரைப் பாடல் :**

என் வாய் நாள்தோறும் உமது மீட்பை எடுத்துரைக்கும்.

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 12:31–13:13**

நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகிய மூன்றுமே நிலையானவைதான் இருப்பினும், இவற்றுள் அன்பே தலைசிறந்தது.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா! ஏழைகளுக்கு நற்செய்தியை அறிக்கவும், சிறைப்பட்டோர் விடுதலை அடைவர், பார்வையற்றோர் பார்வை பெறுவர் என முழக்கமிடவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும் ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 4:21–30**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பினால் அகிலத்தை ஆளும் திருஅவை-யை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணி-யாளர், துறவியர், இறைமக்கள் யாவரும் தமது அழைப்பினையும், பணிவாழ்வின் மேன்மையையும் உணர்ந்தவர்களாக தம் சிரமத்தையும், துன்பத்தையும் பாராமல் உண்மையான அன்போடு பணிபுரிந்து வாழ வரமருள வேண்டுமென்று...

அன்பையும் அறனையும் பண்பையும் தம் அணிகலனாய்க் கொண்டு நாட்டின் தலைவர்களும் பதவிகளில் இருந்து பொறுப்புக்களை நிறைவேற்றுவோரும் தம் பணிகளை சிறப்புடன் செயல்படவும் சுயநலன்-களையும் கட்சி வேறுபாடுகளையும் மறந்து மக்க-ளுக்கான அன்புப்பணியை ஆற்றிட வரமருள வேண்டு-மென்று...

இறைமக்களாகிய நாமும் இறையழைத்தலைப் புரிந்துகொண்டவர்களாக பணி வாழ்வில் வரும் சவால்களையும், எதிர்ப்புக்களையும் சமாளித்து இறைவ-னுக்கு சான்று பகர்ந்து வாழவும், அன்பை பகிர்ந்தளித்து கிறிஸ்துவின் சாட்சிகளாக உண்மையான கிறிஸ்தவ வாழ்வை பிரதிபலித்திட வரமருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 5வது ஞாயிறு (10.02.2019)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 5வது வாரத்தை ஆரம்பிக்கும் நமக்கு இன்றைய மூன்று வாசகங்களுமே இறை அழைத்தலின் மேன்மையை நம் காதுகளில் தவழவிடும் தேனடைகளாக இருக்கின்றன. அழைப்பு என்பது ஓர் ஆன்மீகத்தின் ஆணிவேர். இவ்வாணிவேர் தான் இன்று திருஅவையைக் கட்டிக் காக்கக்கூடிய பக்கவேர்களாக ஆயர்களையும், குருக்களையும் கன்னியர்களையும் மற்றும் பொதுநிலைமக்களையும் உருவாக்கித் தந்திருக்கின்ற மாபெரும் சக்தியாக விளங்குகிறது. இன்றைய நற்செய்தியில் தூய பேதுருவின் அழைப்பு பற்றிய ஆழமான செய்தியை பார்க்கின்றோம். இறையழைத்தல் என்பது எதிர்பாராத ஒரு நிகழ்வு. அழைப்பு என்பது செல்வந்தர்களுக்கு மட்டுமே உரித்தான இலவச இணைப்பு அல்ல, உயர்ந்த மதிப்பில் உள்ளவர்களுக்கான உத்தரவாத ஓலையல்ல. படித்தவர்கள் மட்டும் பெறுகின்றன பல்கலைக்கழக பட்டமும் அல்ல. இது இறைவிருப்பதுடன் எவர் வேண்டுமானாலும் பெறக்கூடிய பொதுவுடமையாகும். இறை விருப்பமானது இறை அழைத்தலாகிறது. எனவேதான் இயேசு “நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. மாறாக நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன் என்கிறார். எமது அழைப்பை உணர பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : எசாயா 6:1–8**

இதோ அடியேன் என்னை அனுப்பும்.

**பதிலுரைப் பாடல் :**

தெய்வங்கள் முன்னிலையில் உம்மைப் புகழ்வேன்

**இரண்டாம் வாசகம் : 1 கொரி 15:1–11**

திருத்தூதர்கள் போதித்ததையே நாங்கள் பறைசாற்-றுகிறோம். நீங்களும் நம்புகிறீர்கள்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா என் பின்னே வாருங்கள், நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்கிறார் ஆண்டவர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 5:1–11**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

எல்லாம் வல்ல இறைவா எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

அன்பினால் பணிசெய்து அனைவரையும் தூய வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் திருஅவையையும் வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியா-ளர்கள், பொதுநிலை ஊழியர் ஆகிய அனைவரையும் நிறைவாக ஆசீர்வதித்து என்றும் அன்பின் பாதையில் வழிநடத்தியருள வேண்டுமென்று...

திருஅவையில் உள்ள ஒவ்வொருவரும் அதன் அங்கத்தவராக இருப்பதால் தூய வாழ்விற்கான பொதுக்குருத்துவ அழைப்பில் பங்குபெறுகின்றார்கள் என்பதை நாம் உணரவும், இறைவனின் அழைப்புக்கள் எல்லாம் சமமே அழைத்தவர் அருகினில் வாழ்வது நலமே என்ற மனப்பான்மையுடன் எமது அழைப்பை உணர்ந்து வாழவும் வரமருள வேண்டுமென்று...

இறைவன் நம்மை அழைக்கும்போது புறத்தோற்-றத்தை பார்ப்பதில்லை. நமது அகத்தூய்மையை பார்க்கின்றார் என்பதை உணர்ந்து பிறர்பணி புரிந்து இறைவனை மாட்சிப்படுத்தவும், சுயநலம் இல்லாத தாழ்ச்சியான உள்ளத்தோடு நாம் பணிசெய்து வாழவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

# விவிலிய வாசிப்பு

## பழைய ஏற்பாடு




### படைப்பில் சூழல் சார்ந்த சிந்தனைகள்

எபிரேயருக்கு மடல் எழுதிய ஆசிரியர் இறைவார்த்தையின் வீச்சை, வீரியத்தை, திருவிவிலயத்தில் இவ்வாறு விளக்குகிறார். கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது. ஆற்றல் வாய்ந்தது, இரு பக்கமும் வெட்டக்கூடிய எந்த வாளினும் கூர்மையானது, ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவுக்குக் குத்தி ஊடுருவுகிறது. எலும்பு மூட்டையும் மச்சையையும் அவ்வாறே ஊடுருவுகிறது. உள்ளத்தின் சிந்தனைகளையும், நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறது. (எபி 4:12) இதில் எடுத்தாளப்படும் வாள் அல்லது கத்தி இறைவார்த்தைக்கு இன்னொரு விதத்திலும் பொருந்தி வருகின்றது. அதாவது கத்தி தன்னிலே நல்லதோ கெட்டதோ அல்ல. அது பொதுவானது. அது பழம் நறுக்கவும் பயன்படும், கழுத்தறுக்கவும் பயன்படும். அதன் தன்மை பயன்படுத்துபவரின் நோக்கம், பயன்பாடு ஆகியவற்றைப் பொறுத்து அமையும்.

ஒரு வரலாற்றுக் காலக்கட்டத்தில் உருப்பெற்ற இறைவார்த்தை பிற்காலத்தில் அதை விளக்கவும், பயன்படுத்தவும், பொருள் கொள்ளவும் முனைந்தவர்களின் விருப்பு, வெறுப்பு, நலன்கள், லாபங்களுக்கு ஏற்ப நன்மைக்கும், தீமைக்கும், நல்லதுக்கும் கெட்டதுக்கும் பயன்படுத்தப்பட்டது என்பது வரலாறு நமக்குச் சொல்லும் பாடம். இத்தகைய இருவகை பொருள்கோள் முறைகளை (நலம் பயக்கின்ற, ஊறு விளைவிக்கின்ற) நாம் படைப்புப் பற்றி விவிலியம் கூறும் கருத்துகளிலும் காணலாம். விவிலியம் இயற்கையைப் பற்றிக் கூறுவதென்ன? விவிலியத்தின் பகுதிகள் இயற்கையை அழிக்க அனுமதிச் சீட்டு அளித்துள்ளனவா? அல்லது அதை வளப்படுத்த கட்டளையிடுகிறதா? அவை இயற்கைக்கு எதிரானவையா? இயற்கையின் மீது கரிசனை கொண்டிருக்கின்றனவா? இந்த வினாக்களுக்கு விடைகாணும் முயற்சிதான் இக்கட்டுரை.

இந்த வினாக்களுக்கு மூன்று தலைப்புகளின் கீழ் விடைகாண முயல்வோம்.

1. படைப்புப் பற்றி வழமையான விளக்கங்கள்.
2. வரலாற்றில் சூழல் சார்ந்த விவிலிய விளக்கங்கள்
3. சூழல் சார்ந்த புதிய பொருள்கோள் முறை விளக்கம்.

### I. படைப்புப் பற்றி வழமையான விளக்கங்கள்

விவிலியத்தின் நெடுகிலும் படைப்புப் பற்றி பலவகையான (நேர்மறையான, எதிர்மறையான) பகுதிகள் காணப்பட்டாலும் (தி.பா 84:1-3, எசா 45:18-19, தொ.நூ 1:1-2:4) வரலாற்றில், இறையியலில் சில வசனங்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக மாற்றப்பட்டுவிட்டன. உதாரணத்திற்கு, அப்பொழுது கடவுள், மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் (மானிடர்) கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும் மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும் என்றார். (தொ.நூ 1:26) என்ற வசனத்தையும், மற்றும் கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள், அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள், கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள் என்றார் (தொ. நூ 1:28) ஆகிய வசனங்களையும் குறிப்பிடலாம். மனிதருக்கு ஆசியாக அளிக்கப்பட்ட இந்த வசனம் வரலாற்றில் ஒரு சிலரின் பொருளாதார நலன்களுக்காக வேறு விதமாகப் பொருள் கொள்ளப்பட்டு இயற்கைக்குச் சாபமாக மாறிப்போனது.

இறைவனின் இந்தக் கட்டளை மனிதர் இயற்கை மீது அதிகாரம் செய்ய அரசாட்சி செய்யக் கிடைத்த அனுமதியாக எண்ணப்பட்டது. எனவே இந்த அரசாட்சியை மனிதர் இயற்கையை அடக்குவதன் மூலம், நுகர்வதன் மூலம் நிலைநிறுத்த முயன்றனர். இதனால் இயற்கை அடக்கப்பட வேண்டிய ஒன்றாக, ஆளப்பட வேண்டியதொன்றாக எண்ணப்பட்டது.

மேலும் இந்த வசனம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதால் உலகின் வளங்கள் எல்லாம் மனிதருக்குப் பயன் தருவதற்காகவே, மனிதரின் பயன்பாட்டுக்கு மட்டுமே படைக்கப்பட்டதாகவும் அதையன்றி அவற்றிற்கு தன்னிரே வேறெந்த நோக்கமும் இல்லை என்ற ஒரு கருத்தாக்கமும் உருப்பெற்றது. அதனால் மனிதர் இயற்கையை வரைமுறையன்றி சுரண்ட ஆரம்பித்தனர். இவ்வாறு சுரண்டுவதும், ஆள்வதும், அடக்குவதும், நுகர்வதும் இறைவன் மனிதருக்குக் கொடுத்த கட்டளையாக, இறைத் திருவுளமாகப் பார்க்கப்பட்டது.

இரண்டாவதாக, தொடக்கநூலின் இரண்டாம் அதிகாரத்தில் வரும் இன்னொரு பகுதியும் இத்தகையதொரு புரிதலுக்கு வலுச் சேர்ப்பதாக பொருள் கொள்ளப்பட்டது. ஆண்டவராகிய கடவுள் மண்ணிலிருந்து எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி, அவற்றிற்கு மனிதன் என்ன பெயரிடுவான் என்று பார்க்க அவற்றை அவனிடம் கொண்டு வந்தார். உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று. கால்நடைகள், வானத்துப் பறவைகள், காட்டு விலங்குகள் ஆகிய எல்லாவற்றிற்கும் மனிதன் பெயரிட்டான் (தொ.நூ 2:19-20)...

தொடர்ச்சி 15ம் பக்கம்..



# குடிமைச் சமூகமும், இலங்கையும்

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் 4ஆம் திகதி நம் இலங்கை நாட்டின் சுதந்திர தின விழாவை நாம் கொண்டாடுகின்றோம். ஆங்கிலேயரின் அடிமைத்தனத்திலிருந்து நாம் விடுதலை அடைந்து 71ஆம் ஆண்டை 2019இல் கொண்டாடுகின்றோம். நாம் சுதந்திரம் அடைந்தது உண்மை என்றாலும் அதனால் கிடைக்கும் பலன்கள் எல்லா மக்களையும், எல்லா நகரங்களையும், எல்லா கிராமங்களையும், மலையக மக்களையும் சென்றடைந்து விட்டதா என்றால் அதற்கு விடை இன்று வரை கேள்விக்குறியாகவே இருந்து வருகின்றது.

நாம் அனைவரும் உண்மைச் சுதந்திரக் காற்றை சுவாசிக்க இன்னும் எத்தனை காலம் காத்திருக்க வேண்டும் என்று தெரியவில்லை. இந்த பின்னணியில் நாம் பார்க்கும்போது நாம் பெற்ற சுதந்திரம் என்ன? சிந்திக்கத் தோன்றுகிறது.

எமது இலங்கை வாழ் மக்கள் சுதந்திர மக்கள் என்று சொல்வதற்கு மனிதத்தை மதிப்பவர்கள், மனித மாண்பைப் போற்றுபவர்கள், நன்மை செய்வதில் வாழ்வை கொடுப்பவர்கள், வாழ்வை அழியவிடாமல் வளர்த்தெடுப்பவர்கள், மனிதம் ஒடுக்கப்படுவதை, அடக்கப்படுவதை, சிதைக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுப்பவர்கள் அதை தடைசெய்பவர்கள் என்ற பட்டியில் இன்று மனிதத்தை சிதைக்கும் உலகமயமாக்கல், முதலாளித்துவத்தின் முரட்டுத்தனங்கள், அரச ஆதிக்கங்கள், இவற்றை எதிர்த்து போராடி, தங்கள் உயிரையே கொடுக்க துணிபவர்கள், நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சமம் என்று வாழ்பவர்கள்.

மேற்கூறப்பட்ட மனித மதிப்புக்களை எமது நாடு இன்றைய சூழமைவில் எல்லாவற்றையும் இழந்து சாதியாலும், சமயத்தாலும், பணத்தாலும் மற்றும் பல வசதி வாய்ப்புக்களாலும் தங்களை உயர்த்திக் கொண்டு, அரசியல் பொருளாதார கல்வி, சமூக அந்தஸ்து என்பவற்றை இழந்த மக்களாக 71 ஆண்டு சுதந்தரமில்லாமல் சுதந்திரமாக பயணித்து இருக்கின்றார்கள்.

இவைகள் எல்லாம் மாறவேண்டும். எல்லா மக்களும் சமமாக, சமூகமாக இருக்க-வேண்டும். அப்போது தான் நாம் வாழும் இலங்கை நாடு ஒரு முழு சுதந்திரம் பெற்ற நாடாக விளங்க முடியும்.

## குடிமைச் சமூகமும், யாவே கடவுளும்

ஒடுக்குபவரும், ஒடுக்கப்பட்டவரும் வாழ்ந்த எகிப்திய சமூகத்தில் ஒரு குடிமைச் சமூகம் என்பது இல்லாதிருந்தது. காரணம், அங்கே மக்களுக்குச் சுதந்திரம் இல்லை, சமத்துவமும், அமைதியும் இல்லை. மாறாக, ஒடுக்கப்பட்ட மக்கள் சொல்லொண்ணா வேதனைப்பட்டார்கள். அதனால் அவர்கள் கடவுளிடம் முறையிட, அவர்களின் அழுகுரலை இறைவன் கேட்டு அவர்களின் கண்ணீரைத் துடைத்து, அவர்களை விடுதலை செய்திட மோசேயை அனுப்புகிறார் (வி.ப 3:10). மோசே ஒடுக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து, யாவே இறைவனின் துணையோடு வாக்களிக்கப்பட்ட ஒரு புதிய நாட்டிற்கு அந்த மக்களை அழைத்து வருகிறார். இறைவன் மோசேக்குத் தந்த பத்துக் கட்டளைகளை அவர் மக்களுக்கு வழங்கினார். இறைவனின் இப்புதிய உடன்படிக்கையின் படி இஸ்ரயேல் மக்கள் வாழ்வதின் மூலமாக இறைவனின் குடிமைச் சமூகம் ஆனார்கள். ஒவ்வொருவரும் தன்னை அன்பு செய்வதுபோல் தன் பிறனையும் அன்பு செய்து வாழ்ந்தார்கள்.

## குடிமைச் சமூகமும், இயேசுவும்.

ஏழைகள் தங்களுக்கென்று தங்க வீடும், உண்ண உணவும், உடுக்க உடையும் இல்லாமல் இருப்பதால் அவர்கள் முகமிழந்திருப்பதை இயேசு உணர்ந்தார். அதே நேரத்தில் பணக்காரர்கள் இந்த ஏழைகளுக்கு உரியவற்றையெல்லாம் பகிராமல் தங்களுக்கே உரிய சொத்தாகக் கொண்டிருப்பதால் அவர்களும் முகமிழந்திருப்பதைப் பார்த்தார் இயேசு. பணக்காரரும், ஏழையும் தாங்கள் இழந்த முகங்களை மீண்டும் பெற ஒரே வழி பணக்காரர் தனக்குள்ளதையெல்லாம் விற்று ஏழைக்குக் கொடுக்க வேண்டும் (மாற் 10:21). இல்லையென்றால் குறைந்தது சக்கேயு மாதிரியைப் பின்பற்றல் வேண்டும்.

இயேசு சக்கேயுவை சந்தித்த போது சக்கேயு சொன்னார், “ஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன்; எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்” (லூக் 19:8) பொதுவாக இயேசுவின் அனுபவத்தில் பணக்காரர்கள் இப்பகிர்வுக்குத் தயாராக இல்லையென்பதை அவர் உணர்ந்தார். எனவேதான் இயேசு சொன்னாார், “செல்வர் விண்ணரசில் புகுவது கடினம் என நான் உங்களுக்கு உறுதியாகச் சொல்கிறேன்...... செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது எளிது” (மத் 19:23-24) என்கிறார்.

இயேசு கனவு கண்ட இறையரசை ஒரு “இறைக் குடிமைச் சமூகம்” அல்லது “இறையரசுச் சமூகம்” எனலாம். அங்கே இறைவன் நம் பெற்றோராகவும், நாம் அனைவரும் அவரது மக்களாகவும் இருக்கின்றோம். அங்கே வேறுபாடுகள் இல்லை. எங்கும் எதிலும் எப்போதும் சமத்துவம் மக்கள் அனைவரின் மனங்களிலும் மகிழ்ச்சியும், நிறைவும் நிலைத்திருக்கும்.

## குடிமைச் சமூகமும்,



# சுதந்திர இலங்

## திருச்சபையும்.

திருத்தூதர் காலத்தில் “மக்கள் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே உயிருமாய் இருந்தனர். அவர்களுள் எவரும் தமது உடமைகளைத் தம்முடையதாகக் கருதவில்லை. எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது” (தி.ப 4:32) பவுலடியாரின் பார்வையில் கிறிஸ்து இயேசுவின் மூலமாக, அவரில் நம்பிக்கை கொண்ட அனைவரும் ஒன்றாய் இருக்கிறார்கள். அவர்களிடம் எந்த வேறுபாடுகளும் இல்லை என்கிறார் (கலா 3:28-29). யோவானின் புரிதலில் மனிதர் வாழும் சமூகத்தை ஓர் அன்புச் சமூகமாகப் பார்க்கிறார் (1யோவா 4:21). இவ்வாறு திருச்சபையின் தொடக்க காலத்தில் ஒரு பொதுமையும், புதுமையும் இருந்தது. அதே நேரத்தில் மனிதர் மத்தியில் பணக்காரன் - ஏழை என்ற வித்தியாசம் பார்க்கும் பழக்கம் வந்தபோது அதை யாக்கோபு வன்மையாகக் கண்டிக்கின்றார் (யாக் 2:1-9)

## குடிமைச் சமூகமும், மரியாளும்.

மரியாளின் பார்வையில் இப்பூமியில் நல்லதொரு குடிமைச் சமூகத்தை இறைவனே உருவாக்குபவராக சித்தரிக்கிறார். இறைவன் ஏற்றத்தாழ்வுகள் நிறைந்த சமூகத்தைத் தலைகீழாகப் புரட்டிப்போட்டு புதியதொரு சமத்துவ குடிமைச் சமூகத்தை உருவாக்குபவராக இருக்கின்றார் (லூக் 1:50-53). மரியாளின் பார்வையில் செல்வமும், செருக்கும் உள்ளவர்கள் இறைவனின் குடிமைச் சமூகத்திற்கு அருகிலும் இருக்கிறார்கள். இதையறிகின்ற மரியாள் இத்தகைய மாற்றுச் சமூகம் படைக்கும் வல்லமை மிக்க இறைவனைப் போற்றிப் புகழ்கிறார் (லூக் 1:47)

## நம் தொடர் சிந்தனைக்கும், செயல்பாட்டுக்கும்.

இலங்கை ஓர் ஒருங்கிணைந்த, முழுமை பெற்ற குடிமைச் சமூகமாக்குவதில் திருச்சபையின் பங்கென்ன? இன்றையத் திருச்சபைகளில் குடிமைச் சமூகங்களின் கூறுகள் இருக்கின்றனவா? வழிபாட்டுச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இருக்கின்றனவா? இங்கே ஜனநாயகம் இருக்கிறதா? மக்களின் பன்முகத் தன்மையை திருச்சபை ஏற்றுக்கொள்கின்றதா? மனித வாழ்வு ஆதாரங்கள் மறுக்கப்படும்போது, மனிதன் சிதைக்கப்படும்போது நம் திருச்சபைகளின் பதிலென்ன? திருச்சபை தெருவில் நின்று வேடிக்கை பார்க்கிறதா? அல்லது ஈடுபடுகிறதா? யார் சார்பாக இருந்து தன் பணிகளைத் திருச்சபை இன்று மேற்கொள்கிறது?

திருச்சபையில் பெரும்பான்மையினராக இருக்கும் பொதுநிலையினருக்கு குடிமைச் சமூகங்களை உருவாக்குவதில் பங்கு என்ன? இன்றைய குருக்களும், இருபால் துறவியரும் இயேசு கனவு கண்ட இறைக் குடிமைச் சமூகத்தை இம்மண்ணில் உருவாக்குவதில் எவ்வளவுக்கு அக்கறை காட்டுகிறார்கள்? ஏழை எளியோருக்கென்று வாழ்ந்த இயேசுவின் சிறப்புத் தேர்வில் அவர்களின் பங்கென்ன?

விரைவாக வளர்ந்து வரும் அன்பியங்கள் இறைக் குடிமைச் சமூகத்தின் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட குட்டித் திருச்சபைகளாக வாழ்ந்து வளர்கின்றனவா? சிந்திப்போம் செயல்படுவோம்.

### இளைஞர் ஆண்டு 2019

# இளைஞனே புதிய நம்பிக்கை!

இளைஞன் என்பவன் எல்லையற்ற ஆற்றலின் ஊற்று, கணக்கிட முடியாத திறமைகளின் புதையல், உயரிய நோக்கோடு உண்மையாய் உழைத்தால் சிகரமும் அருகில் வரும். ஒவ்வொரு இளைஞனும் நம்பிக்கையைச் சுமந்தால், நம்பிக்கை இளைஞர்களைச் சுமக்கும், இருள் நீக்கும் கதிரவனாய் ஒளிர முடியும். இளைஞர்களை சாகடிக்கும் புகைப்பழக்கம், மயக்க வைக்கும் போதைப்பழக்கம் எனும் மாய வலையில் சிக்குண்டு வாழ்வைத் தொலைத்து விழி பிதுங்கி நிற்கும் நிலை மாறவேண்டும். நவீன சினிமா கலாச்சாரம், நவீன உடை நடை பாவனை முறை அதில் சிக்கி அலையும் நிலை மாற வேண்டும்.

எதையும் சாதிக்க வேண்டும் என்ற நம்பிக்கை வேண்டும். சாதிக்க துடிக்கும் மனமும், சமுதாயத்தை சீர்தூக்கும் எண்ணமும், உருவாக வேண்டும். நம்பிக்கை இளைஞனின் முன்னேற்றப்பாதைக்கு உரமாகும். அது இல்லையேல் அவநம்பிக்கைக்கு உட்பட்டு அல்லலுற நேரிடும்”

“ஸ்காட்லாந்து நாட்டு இராபர்ட் புரூஸ் அரசன் ஆறு முறை போரில் தோற்று, சோர்ந்து காட்டில் தஞ்சம் புகுந்தான். ஒரு சிலந்தி பூச்சி பலமுறை முயன்று வலை பின்னிய நிகழ்ச்சியைக் கண்ட அவன் புது நம்பிக்கைப் பெற்று, மீண்டும் போரிட்டு நாட்டைக் கைப்பற்றினான் என்கிறது வரலாறு.

கிரேக்க மாவீரன் ஜீலியஸ் சீசர் தன் படைகளுடன் கடல் பயணம் செல்கையில், சூறாவளியால் படகு தத்தளித்தது. போர்வீரர்கள், பயந்து நடுங்கினார். உடனே ஜீலியஸ் சீசர், வீரர்களே அஞ்சாதீர்கள். மாவீரனின் ஜீலியஸ் சீசரின். அதிஷ்டத்தையும், ஆற்றலையும் சுமந்து செல்கிறீர்கள். நம்பிக்கையோடு முன்னேறுவோம்” என உற்சாகமூட்டினாள். வெற்றிகரமாய் கரைசேர்ந்தான்.

வெறும் நம்பிக்கை மட்டும். பயன் தராது. அத்தோடு அயராத உழைப்பும், விடாமுயற்சியும், உறுதுணையாய் அமைந்தால் வெற்றிகனியைப் பெறுவது உறுதி. எனவே ஒவ்வொரு இளைஞனும், தம்முள் இருக்கும், ஒளியை ஏற்றி விட்டால் இருள் என்னும் தடை விலகும் என்பதை உணர்வோம்.




## என் அருமையான இளைஞர்களே....

- நேரம் கிடைக்கும்போது கிரிக்கெட் பாருங்கள். ஆனால் பார்ப்பதற்காக நேரத்தை விரயமாக்காதீர்கள். எதிர்காலத்தில் கிரிக்கெட் வீரராக மாறவேண்டும் என்றால் அவர்களிடமிருந்து எதைக் கற்றுக்கொள்ள முடியும் என்று கவனாய் பாருங்கள்.
- சினிமா பாருங்கள். ஆனால் இரசிகர் மன்றம் வைத்து இரசனை இழந்து விடாதீர்கள். எதிர்காலத்தில் நீங்களும் நடிகராக வேண்டும் என்றால் தொடர்ந்து பாருங்கள். ஆனால் சினிமா மட்டும் தான் வாழ்க்கை என்று நினைத்து ஏமாந்து போகாதீர்கள்.

## தன்னாய்வுக்காக சில கேள்விகள்

### நேரம் எடுத்து பதில்களை காணுங்கள்

1. நான் யார்?
2. என் வாழ்வின் இலக்கு அல்லது இலட்சியம் என்ன?
3. அதை அடைவதற்கு என்ன முயற்சிகள் செய்துகொண்டிருக்கின்றேன்?
4. என்னுடைய நிறை குறைகள் என்ன?
5. எனக்கு நண்பர்கள் உண்டா?
6. என் உண்மையான நண்பர்களின் பண்புகள் என்ன?
7. ஒரு நாளை எப்படியெல்லாம் பயன்படுத்துகின்றேன்?
8. கடவுள் மீது கொண்டுள்ள நம்பிக்கையை எப்படி வெளிப்படுத்துகிறேன்?
9. என்னுடைய திறமைகள் எவை?
10. யார் யாருடன் உறவு கொள்ள நினைக்கின்றேன்? ஏன்?

இளமை என்பது
இனிமையானது
அது
இடைவிடாது
தேடுவது
புதுமையே



# திருமறையின் வரலாற்றுச் சுருக்கம்

### 3. நடுவர்களும் அரசர்களும்

யோசுவாவின் தலைமையில் இஸ்ராயேலர் யோர்தான் ஆற்றைக் கடந்து ஜெரிக்கோ என்ற பிலிஸ்தியரின் பெரிய தலைநகரை முதலில் கைப்பற்றினார்கள். யோசுவாவைத் தொடர்ந்து இஸ்ராயேலரை வழிநடத்த வானகத் தந்தை பல நடுவர்களை நியமித்தார். கிதேயோன், சாம்சன் போன்ற வலிமைமிக்க நடுவர்களின் வழிகாட்டலில் அவர்கள் பிலிஸ்தியரை பலஸ்தீனாவில் இருந்து விரட்டி அசீரியாவுக்கு அனுப்பிவிட்டார்கள். நாடு முழுவதையும் கைப்பற்றிய இவர்கள், அதைப் பிறிதொரு கோத்திரங்களுக்கும் பகிர்ந்தளித்தார்கள். லேவியின் கோத்திரத்தார் ஆலயப்பணிக்காக ஒதுக்கப்பட்டிருந்ததால் இவர்களுக்கு நிலம் கொடுக்கப்படவில்லை.

பலஸ்தீனாவை இவர்கள் தம் கைவசம் கொண்டு வந்தாலும் பிலிஸ்தியரின் தாக்குதல்கள் இவர்களைத் தொடர்ந்துகொண்டே இருந்தன. இதனால் இவர்கள் தங்களுக்கென அரசர் ஒருவர் தேவை என்பதை உணர்ந்தார்கள். சாமுவேல் நடுவரிடம் தங்கள் கோரிக்கையை முன்வைத்தார்கள். வானகத் தந்தை ஒருவரே இஸ்ராயேலரின் அரசராக இருக்க, எவ்வாறு வேறு ஒருவரை அரசராக்கலாம் என்று அவர் முதலில் மறுத்தார். பின்பு வானகத் தந்தையின் ஆலோசனை பெற்றபின், சவுல் என்பவரை அவர்களின் முதல் அரசராக அபிஷேகம் செய்தார். சவுல் அரசர் தான் வானகத் தந்தையின் பதிலாளி என்பதை மறந்து செயற்பட்டதால் இவர் இவரின் கோபத்துக்கு ஆளானார். இவர் சாமுவேலுக்குத் தோன்றி சவுலைத் தள்ளிவிட்டு ஜெஸ்சே என்பவரின் மகன்களில் ஒருவனான தாவீதை அரசராக அபிஷேகம் செய்யுமாறு சொன்னார். தாவீது அரசராக அபிஷேகம் செய்யப்பட்டதும், தாவீதின் மீது வெறுப்புக்கொண்ட சவுல் அவரைக் கொல்லத் தேடினான். சவுலின் சூட்சிகள் எல்லாவற்றிலும் இருந்து தப்பிய தாவீது, சவுல் இறந்தபின் அரியணை ஏறினார்.

தாவீது வானகத் தந்தைக்கு மிகவும் பிரியமான அரசராக இருந்தார். பிலிஸ்தியரை முற்றாக முறியடித்த பெருமை இவருக்கே உரியது. இவர் தன் ஆட்சிக்காலத்தில் ஒரே இறைவன், ஒரே நாடு, ஒரே மக்கள் என்ற நிலையை உருவாக்கினார். இவர் தன் போர்வீரருள் ஒருவரான உரியாவின் மனைவியைத் தன் மனைவியாக்க இவனைக் கொன்றதால் கடவுள் முன்னிலையில் பெரும் பாவியாக மாறினார். தன் பாவங்களுக்காகத் தன் உயிரை மாய்க்கும் அளவுக்கு வருந்தியதால், வானகத் தந்தை இவரை மன்னித்தார். இவர் எருசலேம் நகரில் அரச மாளிகையைக் கட்டினார். இவரின் காலத்துக்குப் பின் ஊரியாவின் மனைவிக்குப் பிறந்த மகனான சாலமோன் அரியணை ஏறினார். இவர் வானகத் தந்தையிடம் இருந்து ஞானத்தைப் பெற்று மிகச் சிறப்பாக இஸ்ரயேலரை ஆட்சிசெய்தார். இவரது ஞானத்தைக் காண பல நாடுகளில் இருந்து அரசர்களும் அரசிகளும் வந்து வியந்தார்கள். இவர் கேதுரு மரங்களைக் கொண்டு எருசலேமில் வானகத் தந்தைக்கு அழகான ஆலயம் ஒன்றைக் கட்டினார். இவரின் காலத்துக்குப் பின் இஸ்ரயேலரின் ஒற்றை ஆட்சி இரண்டாகப் பிளவுபட்டது. யூதா, இஸ்ராயேல் என இது இரண்டாகப் பிரிந்தது.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# பாராட்டுதல்



“அதிகமாகப் பாராட்டு, குறைவாகக் குற்றஞ்சாட்டு” இதுவே சிறாரைச் சீராக வளர்க்கச் சிறந்த வழிகாட்டி என்று அறிஞர் “பொரி” மொழிந்துள்ளார்.

குறும்புத்தனம் மிகுந்த ஒரு சிறுமி, அச்சிறுமியைத் தாய் எப்போதும் அடித்துக்கொண்டும் குற்றம் சாட்டிக் கொண்டும் இருப்பாள். ஒருநாள் அச்சிறுமி தனிக் கவனத்தோடு பெரும் முயற்சி எடுத்துத் தன் குறைகளை அகற்றி நல்ல பிள்ளையாக நடந்தாள்.

அன்றிரவு அச்சிறுமி தன் படுக்கையில் அழுது கொண்டிருந்த குரலொலி தாயின் செவியினுள் வந்து விழுந்தது. “ஏன் அழுகிறாய்?” என தாய் வினவினாள்.

“நான் இன்று நல்ல விதமாய் நடந்துகொள்ள-வில்லையா? என சேய் பதில் சொன்னாள். பிள்ளையின் இந்தச் சொற்கள் தாய்க்குப் பெரிய வேதனையைக் கொடுத்தன. தன் மகள் ஏதாவது ஒரு சிறு தவறு செய்யும்போது “தொண”, “தொண” வென்று கடிந்துக் கொண்டிருக்கிறேன். “ஆனால் பிள்ளை உண்மையாகவே தவறுகளை நீக்கி நல்லவளாக முயற்சிக்கும்போது ஒரு நல்ல வார்த்தை முதலாய்க் கூறி உற்சாகப்படுத்தத் தவறிவிட்டேன். குற்றஞ்சாட்-டப்படும்போது பொறுமையோடிருந்த குழந்தை நல்லதைச் செய்யும்போது, நியாயமான பாராட்டுதலை எவ்வளவு ஆவலாய் எதிர்பார்த்து ஏங்கி இருக்கும் என்று சொல்லித் தாய் தன்னையே நொந்துக் கொண்டாள். “நல்ல வார்த்தை களர் நிலத்தை விளை நிலமாக்கும்”

“சோர்வுற்றவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்” (1 தெச 5:15)

# எனது நாடு இலங்கை

- இயற்கையில் அழகு நிறைந்தது. இலங்கையை ஸ்ரீ லங்கா, இரத்தின துவீபம், தப்பிரபேன், ஈழம் என பல பெயர்களில் அழைப்பர்.
- இலங்கை நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும்.
- இது இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ளது.
- இலங்கை 65610 சதுர கிலேமீட்டர் பரப்பளவு கொண்ட ஒரு தீவாகும்.
- இலங்கையின் தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர் எனப்பல இனத்தவர் வாழ்கின்றனர்.
- தொழிற்துறைகள் இறப்பர்,தேயிலை,தென்னை என்பன பிரதான தொழிற்துறைகள் அத்தோடு விவசாய உற்பத்திகள், ஆடைத்தொழில், சீமேந்து, பெற்றோலியம் சுத்திகரிப்பு, ஜவுளி, புகையிலைத் தொழிற்துறைகளும்.
- இலங்கையில் இருந்து தேயிலை, இறப்பர், ஆடைகள் என்பன ஏற்றுமதியாகின்றன.
- இலங்கையில் பேதுருதாலகால, சிவனொளிபாதம் போன்ற பெரிய மலைகள் உள்ளன.
- இங்கு மகாவலிகங்கை, களனிகங்கை, மாணிக்க கங்கை போன்ற ஆறுகள் பல உள்ளன.
- அழகான நீர்வீழ்ச்சிகள் பல உள்ளன.
- இலங்கையின் தலைநகர் : ஸ்ரீ ஜயவர்த்தனபுர ஆகும்.
- நாணயம் : இலங்கை ரூபா
- வர்த்தகத் தலைநகரம் : கொழும்பு
- கொழும்பில் அரசாங்க அலுவலங்கள் பல உள்ளன.
- சனத்தொகை : 19 மில்லியன்
- எழுத்தறிவு வீதம் : சிங்களம் மற்றும் தமிழ் பின்தங்கிய கிராமங்களைத் தவிர ஆங்கிலமும் பரவலாகப் பேசப்படும் ஒரு மொழியாகும்.
- சமயம் : பௌத்தம், இந்துமதம், கிறிஸ்தவம், இஸ்லாம்
- உலகின் பல நாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகள் பெருமளவில் இலங்கைக்கு வருகின்றனர்.
- இவர்கள் நுவரெலியா, பாசிக்குடா, ஹிக்கடுவை, நீர்கொழும்பு, திருகோணமலை, கண்டி ஆகிய இடங்களுக்குச் செல்கின்றனர்.
- இலங்கையின் இயற்கை அழகு உல்லாசப் பயணிகளைப் பெரிதும் கவர்கிறது. இந்து சமுத்திர-த்தின் முத்து என்று இலங்கையை எல்லோரும் போற்றுகின்றனர்.
- இம்மாதம் எமது நாட்டின் 71வது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றோம்.




# விவிலியப் பகுதி



## மத்தேயு நற்செய்தி


**அதிகாரம் 1 முதல் 14 வரை**

16. ஞானிகள் எங்கிருந்து எருசலேமுக்கு வந்தார்கள்?
17. தலைமைக் குருக்களையும், மறைநூல் அறிஞர்-களையும் மெசியாவின் பிறப்புப்பற்றி கேட்க ஒன்று கூட்டியவன் யார்?
18. ஞானிகள் யாரைக்கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைந்தார்கள்?
19. ஞானிகள் கொண்டுவந்த காணிக்கை என்னெ-ன்ன?
20. யாரிடம் திரும்பி போக வேண்டாம் என்று ஞானிகள் கனவில் எச்சரிக்கப்பட்டனர்?
21. யார் தம் குழந்தைகளுக்காக அழுது கொண்டிரு-க்கிறார்?
22. “ராமாவிலே... அவரோடு இல்லை” என்று உரைத்த இறைவாக்கினர் யார்?
23. யூதாவில் தம் தந்தைக்கு பிறகு அரசாண்டவர் யார்?
24. மனம் மாறுங்கள் என்று யூதாவின் பாலை நிலத்தில் பறைசாற்றியவர் யார்?
25. பாலைநிலத்தில் ஆண்டவரின் பாதையை செம்மை-யாக்குங்கள் என்றுரைத்த இறைவாக்கினர் யார்?
26. யோவான் அணிந்திருந்த ஆடை எதனால் ஆனது?
27. தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு யோர்தான் ஆற்றில் திருமுழுக்கு பெற்றவர்கள் எந்த பகுதியில் உள்ளவர்கள்?
28. விரியன் பாம்பு குட்டிகளே என்று யோவான் யாரைக் குறிப்பிடுகின்றார்?
29. நீங்கள் மனமாறியவர்கள் என்பதை எவற்றால் காட்ட வேண்டும்?
30. கற்களிலிருந்து யாருக்கு பிள்ளைகளைத் தோன்றச் செய்ய கடவுள் வல்லவர்? **தொடரும்**

**விடைகள் 15ம் பக்கம்**

# கண்டுபிடியுங்கள்!

**குட்டீஸ்! ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கீழே போவதற்கு வழி தெரியவில்லையாம். நீங்க சொல்லிக் கொடுக்கின்றீர்களா?**



## மாணவர் ஒளி



# உன்னோடு ஒரு நிமிடம்



# நீ கலங்குவதன் காரணம் என்ன?

சுண்டக் காய்ச்சிய சமுத்திரத்தின் தண்ணீரைக் காட்டிலும் உன் கண்ணீருக்கு உப்புச்சுவை ஓங்கியிருக்கிறது.

அந்த வானத்தின் சிவப்புச் சூரியனோ என ஐயவுறும் அளவிற்கு இரத்த நிறமேறி சிவந்து துடிக்கின்றன உன் விழிகள்.

நீ மூடி மறைப்பதை நடுங்கியே காட்டிக் கொடுக்கின்றன வெளிறித் துடிக்கும் உன் உதடுகள்.

நீ வலக் கையைக் காட்டி இடப் பக்கம் திரும்புகிறாய்.

எங்கே செல்கிறாய் என்றே தெரியாத திசையில் தொடர்ந்து பயணமாகிறாய். அவ்வப்போது முகத்தைக் கழுவிக் கொள்கிறாய் ஆனாலும் விழுந்துவிடும் எத்தனிப்பில் எப்போதும் விழிகளில் கண்ணீர்.

இரவில் எப்படியெல்லாம் புலம்பினாய் என்பதை தலையணை முழுதும் எழுதிக்காட்டி விடுகின்றன கண்ணீரின் கறைகள்.

எதற்காக நீ அழுகிறாய்? உனது குழந்தைக்கால கனவுகள் எல்லாம் காலத்தோடு அழிந்து விட்டதாக நினைத்து நீ அழுவதைப் பார்க்கிறேன்.

வாழ்வில் நடந்த, கடந்த காலத் தோல்விகளையும் செய்த குற்றங்களையும் எண்ணி நீ கலங்குவதைப் பார்க்கின்றேன்.

உனது சுய மதிப்பு சுரண்டப்பட்டதற்காக நீ தேம்பி அழுவதை நான் பார்க்கின்றேன்.

உன் வாழ்வில் சரியான சூழ்நிலைகளும் சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் உனக்கு அமையாததால் உன் ஆற்றல்கள் அனைத்தும் வீணாகிப் போனதை நினைத்து நீ அழுவதை நான் பார்க்கின்றேன்.

நான் உனக்குக் கொடுத்த சிறந்த கொடையான உனது தனித்தன்மை மற்றவர்களின் காலால் மிதிப்பட்டதற்காக நீ வேதனைப்படுவதை நான் பார்க்கின்றேன்.

உனக்குக் கொடுத்த திறமைகளை நீ தவறாகப் பயன்படுத்தியதை நினைத்து வேதனைப்படுவதை நான் பார்க்கின்றேன்.

மற்றவர்களைப் போன்று நல்லவனாக வாழாததை நினைத்து நீ துன்பப்படுவதை நான் பார்க்கின்றேன்.

மற்றவர்களைப் போல் “நான் நல்லவன் இல்லையே” என உன்னையே நீ கடிந்து கொள்வதை நான் பார்க்கின்றேன்.

“நான் ஒரு பாவி, நான் ஒன்றுக்கும் உதவாதவன், நான் ஒரு உதவாக்கரை நான் மதிப்பில்லாதவன்” இப்படி நீ உன்னையே வெறுப்புடன் நோக்குவதை நான் பார்க்கின்றேன்.

“கடவுள் ஏன் என்னை இப்படிப் படைத்தார்?” “பாவத்தில் வாழும் என்னை ஏன் படைத்தார்?” என்று சில வேளைகளில் என் மீது பழிசுமத்துவதை நான் பார்த்திருக்கின்றேன்.

கவலைப்படாதே! அமைதியாயிரு! உன் வேதனைகளிலிருந்து, உன் அழுகையிலிருந்து உனக்கு நான் விடுதலை அளிப்பேன்.

உனது துயரங்களிலிருந்து நான் உனக்கு விடுதலை அளிப்பேன்.

உதிரம் எனும் இருட்டறையில் ஒளியற்றுக் கிடந்தாயே. ஞாபகம் இருக்கிறதா?

தொடரும்

# சுதந்திரக் காற்று



**இன்றைய இளைஞர்களே நம் நாட்டின் நாளைய தலைவர்கள் நீங்கள்.**

தடாகத்தில் தோன்றிய தாமரை பூ மாலையில் சேரும்போது மதிப்பு பெறுகிறது. கடலை விட்டு முத்து வெளியே வந்து முத்துமணி மாலையாகச் சேரும்போது மதிப்பு பெறுகிறது. மனிதர்களாகிய நாமும், நமக்குள் உறங்கிக் கொண்டிருக்கும், சக்தியை உசுப்பிவிட்டு ஆக்கத்தோடு செயல்படும்போது நமக்கும் மற்றவர்களுக்கும் பயன் அளிக்கிறோம்.

இன்றைய இளைஞர்களே, மாணவர்களே, நம் நாட்டின் நாளைய தலைவர்கள் நீங்கள். நாளைய வரலாறு காண உங்களுக்குள் சோம்பித் திரிகின்ற செயற்பாடுகளை விரட்டிவிட்டு, பல சாதனைகள் புரியும், சமுதாயத்தை உருவாக்கவும், நம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கையை விடாமுயற்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். இப்படிப்பட்ட விடாமுயற்சி நம் முன்னோர்களுக்கு இருந்ததால் தான் நாம் இன்று சுதந்திர காற்றை சுவாசித்துக் கொண்டு இருக்கின்றோம். பெற்று தந்த சுதந்திரத்தை நாங்கள் அனுபவிக்கின்றோமா?

தண்ணீர் விட்டு வளர்ந்த சுதந்திர செடியை கண்ணீர் விட்டு அழித்துக் கொண்டிருக்கின்றோம். செந்நீர் சிந்தி வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். எம் நாட்டை பாகம் பிரிந்து கொடுக்கின்றோம். சாதி மத பேதம் என்று பிரிவினையிலும், லஞ்சம் கொலை, கொள்ளை எங்குமே கண்டிராத அரசியல் போன்றவற்றால் நம் சுதந்திரம் சீரழிகின்றது இன்று.

இளைஞர்களே, மாணவர்களே 71வது சுதந்திர தினத்தை சுவாசிக்க உள்ளோம். இயற்கை செறிந்த நாட்டை அழிக்கலாமா? நாடு நமக்கு என்ன செய்தது என்ற கேள்வியை விட்டுவிட்டு நாட்டிற்கு நாம் என்ன செய்தோம் என்ற சிந்தனை உள்ளவர்களாக பிறருக்கு வாழ்வை கொடுத்து நேர்மையோடு சுதந்திரக் காற்றை சுவாசிப்போம். பெற்ற சுதந்திரத்தை பாதுகாப்போம்.

**அன்பிற்கு எப்பொழுதும் ஒரே மொழிதான்...**
**ஏற்றுக்கொண்டாலும், அழும்**
**நிராகரித்தாலும் அழும்**

**துரோகங்கள் வலியை விட ஆச்சரியத்தை தான் தருகின்றன எப்படி இவ்வளவு சிறப்பாக நடித்து ஏமாற்றினார்கள் என்று...**

**மறக்கக் கற்றுக்கொள்ளுங்கள் – மனம் மகிழ்ச்சி பெறும்**
**துறக்க கற்றுக் கொள்ளுங்கள் – வாழ்வு தூய்மை பெறும்**

**விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுக வாழ்வு சீக்கரத்தில் துளிர்க்கும்...**

**காற்று இசை ஆகும், நீ அதை சுவாசித்தால். வார்த்தைகளும் கவிதை ஆகும், நீ அதை வாசித்தால், இந்த உலகமே உனதாகும், நீ உன்னை நேசித்தால்**

# விவிலியம் பற்றி

- யூதர்களின் மறைநூலை Tanak என்று அழைக்கின்றனர். அதாவது “தோரா” (ஐந்நூல்) “நெகிம்” இறைவாக்கினர் நூல்கள், “கேத்துபீம” (இலக்கிய நூல்கள் என்பதன் சுருக்கம். இவை எபிரேய மொழியில் காணப்படும் 39 நூல்களின் தொகுப்பாகும்.
- கத்தோலிக்க திருவிவிலியம் என்று பழைய ஏற்பாடு 46 நூல்களையும், புதிய ஏற்பாடு 27 நூல்களையும் கொண்ட தொகுப்பாகும். இதில் ஏழு நூல்களான “இணைத்திருமறை நூல்கள் 1. தோபித்து 2. யூதித்து 3. சீராக்கின் ஞானம் 4. சாலமோனின் ஞானம் 5. பாரூக் 6. மக்கபேயர் 1 7. மக்கபேயர் 2 என்று அழைக்கப்படுகின்றன.

  இவைகள் “வுல்காத்தா” என்ற இலத்தீன் மொழிபெயர்ப்பிலும், அதற்கு முந்திய கிரேக்க மொழிபெயர்ப்பான “எழுபதின்மார் நூலிலும் காணப்படுகின்றனர்.
- திருவிவிலியத்தின் இரண்டாம் பகுதியான புதிய ஏற்பாட்டில் 27 நூல்களும் கிரேக்க மொழியில் காணப்படுகின்றன.
- பிரிந்த சபையினர் (சீர்திருத்த சபையினர்) எபிரேய நூல்களின் எண்ணிக்கையான 39 என்பதன் அடிப்படையிலும் புதிய ஏற்பாடு 27 என்ற எண்ணிக்கை அடிப்படையிலும் 66 நூல்கள் உள்ளடக்கிய விவிலியத்தைக் கொண்டுள்ளனர்.
- பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த எதிர்ப்பின் விளைவாக 1546இல் திரிதெந்து நகரில் கூடிய திருச்சங்கம் கத்தோலிக்க திருச்சபையின் மரபை வலியுறுத்தும் வகையில் ஏழு நூல்களையும் திருமறை நூல்கள் என்று அதிகாரப்பூர்வமாக அறிக்கையிட்டது.

**மாணவர்களே! உங்களது ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்ப வேண்டிய முகவரி**
**இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08.**
**மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com**

# புனித செபஸ்தியார் ஆலய திருவழா



புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கும் மத்துகம பங்கின் அருப்பலகந்த தோட்ட புனித செபஸ்தியார் ஆலயத்தின் திருவழா கடந்த 24, 25, 26 தினங்களில் வெகு விமரிசையாக இடம்பெற்றது. கொடியேற்றத் திருப்பலியானது அருட்தந்தை தேவசீலன் CMF அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருவிழா திருப்பலியானது அதிவண. அருட்தந்தை மனோகுமரன் அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

**தகவல் : அருட்தந்தை ஒனாசிஸ் பர்னாந்து.**

# புனித செபஸ்தியார் ஆலய திருவழா



மடாம்பவே பங்கின் ஒத்தரவாடிய இடத்தில் புனித செபஸ்தியார் ஆலயத்தின் 82வது ஆண்டு திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. அன்றைய திருவிழாவில் விசேட திருப்பலியை அருட்தந்தை அசித்த மனோஜ் அடிகளார் ஒப்புக்கொடுத்தார். திருப்பலி ஒப்புக்கொடுத்த அருட்தந்தை, பங்கில் பணிபுரியும் அருட்சகோதரிகளையும் படத்தில் காண்கின்றீர்கள்.

**தகவல் : கல்தேர**

# நாயக்ககந்தை திருப்பாலத்துவ சபை மாணவர்களின் நத்தார் கரோல் போட்டி வெற்றிகள்



2018 கார்த்திகை மாதம் 06ம் திகதி திருப்பாலத்துவ சபை வத்தளை வட்டார கரோல் போட்டியில் கலந்துகொண்டு முதல் இடம் பெற்ற நாயக்ககந்தை காணிக்கை அன்னை ஆலய திருப்பாலத்துவ சபை மாணவர்கள் 2018 மார்கழி 1ம் திகதி சனிக்கிழமை மருதானை புனித சூசையப்பர் கல்லூரியில் கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை இயக்குனர் அருட்பனி குரூசன் குமார் பெரேரா அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற நீர்கொழும்பு, அவிசாவளை, வத்தளை, கொழும்பு உயர்மறைமாவட்டங்களைச் சேர்ந்த 7 குழுக்களுக்கான கொழும்பு உயர்மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை கரோல் போட்டியில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்றனர்.

மேலும் ஆண்டுதோறும் நடைபெறும் திருப்பாலத்துவ சபை கரோல் போட்டிகளில் மூன்று தடவைகள் முதல் இடத்தை சுவீகரித்துக் கொண்ட பெருமைக்கு உரியவர்கள் ஆகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எமது அனைத்து வெற்றிக்குமான முக்கிய மூலகர்த்தா எமது ஆலய பங்குத்தந்தை அருட்பணி ரஞ்சன சில்வா அடிகளாரே என்பதைப் பெருமையுடன் தெரிவிப்பதில் மகிழ்ச்சிடைகிறோம். அத்துடன் வத்தளை வட்டார திருப்பாலத்துவ சபை இயக்குனரும் எமது உதவிபங்குத்தந்தை அருட்பணி. லலித் திசேரா அடிகளாரும் போட்டிகளை உரிய காலத்தில் தெரிவித்து, பங்குபற்ற ஊக்கமூட்டி துணை நின்றார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து நன்றி கூறுகிறோம்.

மேலும் எமது பங்குத் தந்தையும், உதவிப் பங்குத் தந்தையும் எமது வெற்றிக்கான காவல் தூதர்களாக வழிநடத்தி துணை புரிந்தமை எமக்குக் கிடைத்த இறைவனின் பெரும் கொடை என்றால் அது மிகையாகாது. மேலும் திருப்பாலத்துவ சபை வத்தளை வட்டார தமிழ்ப்பிரிவு பொறுப்பாளரும் வத்தளை புனித அன்னம்மாள் ஆலய உதவிப்பங்குத்தந்தை அருட்பணி சுராஜ் பர்னாந்து அடிகளார் உரிய நேரத்தில் வட்டார போட்டிகளை நடாத்தி எமக்கு ஊக்கமளித்தமைக்கும் எமது உளமார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

அமைதியின் தேவன் அன்பர் இயேசு பாலனின் பிறந்தவிழா கரோல் போட்டிகளில் ஆர்வமுடன் பிள்ளைகளை ஈடுபடுத்தி உறுதுணையாக நின்ற பெற்றோருக்கும் பங்குபற்றி 24 மாணவர்களுக்கும் ஊக்குவிப்பாளராகிய திருமதி. கோமதி ஜோன், திருமதி டயஸ் ஆகியோருக்கு நாம் எமது நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

படத்தில் பங்குத்தந்தை அருட்பணி. ரஞ்சன் சில்வா அடிகளாரையும், உதவிப்பங்குத்தந்தை லலித் திசேரா அடிகளாரையும் ஊக்குவிப்பாளராகிய திருமதி. கோமதி ஜோன், திருமதி டயஸ் ஆகியோரையும் மற்றும் வெற்றியீட்டிய சில மாணவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் : ஜோன்.**

# சூரியகட்டைக்காடு செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா

சூரியகட்டைக்காடு பங்கின் முதன்மை ஆலயமான தூய செபஸ்தியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி 20ம் திகதி ஞாயிற்றுகிழமை 7.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட குருக்களின் முதல்வர் வண. விக்டர் சோசை அடிகளாரால் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இத்திருப்பலியில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களை செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மல நாதன், காதர் மஸ்தாள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் சிராய்லா, நானாட்டான் பிரதேச சபை தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள். பங்குத்தந்தை, அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்கு மக்கள் அயல் பங்கு மக்கள் கலந்து சிறப்பித்தனர்.

**தகவல் : யேசுதாசன்**

# தைப்பொங்கல் திருநாள்





“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்” என்கிறார் திருவள்ளுவர்.

இத்தைப்பொங்கல் திருநாள் நன்றி மறவாமை, செய்யும் தொழிலே தெய்வம், உயிர்களை மதித்தல், பகிர்ந்து உண்ணல், அன்பு, உறவு புனிதம் இயற்கையை நேசித்தல், ஒற்றுமை உணர்வு போன்ற விழுமியப் பண்புகளுடனும், நாட்டின் நீர்வளமும், நிலவளமும், கனிய வளமும் செழுமை பெற கதிரவனே அடிப்படை என்ற படியால் அனைத்து உழவர்களும் ஒற்றுமையோடு கதிரவனுக்கு நன்றி செலுத்தும் நன்றித் திருநாளாக, அறுவடை திருநாளாக கொண்டாடுவதே தைப்பொங்கல் திருநாள்.

இந்தவகையிலே இராஜகிரிய ஆலய பங்கின் அனைத்து சங்கத்தினரும், மறையாசிரியர்களும், இளைஞர்களும் இணைந்து கலாச்சார முறையில் பொங்கல் பொங்கி அருட்பணி. மைக்கல் சந்தானம் அடிகளாரின் வழிகாட்டலில் சிறப்பாக திருப்பலி ஒப்புக்கொடுத்தனர்.

**தகவல் : திரு. அலெக்சாண்டர், இராஜகிரிய**

# மனவளக்கலை யோகா தவமையம் திறப்பு விழா





கடந்த 21.01.2019 அன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மனவளக்கலை யோகா தவமையம், பழைய தபாற் கத்தோர் வீதி கோப்பாய் தெற்கில் அமைந்துள்ள துணைப் பேராசிரியர் அருள்நிதி அ. வேதநாயகம் அவர்களின் இல்லத்தின் ஒரு பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி தென் கோவை தவமையத்தில் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களால் வடிவமைக்கப்பட்ட உடல் நலத்திற்கான உடல்பயிற்சிகளும், உயிர் வளத்துக்கான காயகல்ப பயிற்சிகளும் மனவளத்திற்கான தியானப்பயிற்சிகளும், நட்பு நலத்திற்கான அகத்தாய்வுப் பயிற்சிகளும் நடைபெற்றன.

சிறப்பாக யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவர்களும் துணை பேராசிரியர்களும் தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த பேராசிரியர்களும் பயிற்சிகளை வழங்கினர். பங்கேற்று பயனறிந்து பயிற்சி பெற்ற அனைவருக்கும் நன்றிகள் வாழ்க வளம் பெறுக.

**தகவல் : அருள்நிதி ய. தேவதாஸ் I.V.D**
**தென்கோவை தவமைய செயலாளர்**
**மனவளக்கலை துணைப் பேராசிரியர்**
**077665236**

மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் :
www.colomboarchdiocesancatholicpress.com



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 12

## மரபு மன்றாட்டுகளை வேண்டுவோம்

எல்லாக் கிறிஸ்தவ சபையினரும் செபிக்கின்றனர், பல்வேறு செப உத்திகளைக் கையாண்டு இறைவேண்டலில் ஈடுபடுகின்றனர். ஆனால், கத்தோலிக்கர்களின் செபமுறையில் உள்ள ஒரு தனித்தன்மை தலைமுறை தலைமுறையாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பாரம்பரியச் செபங்கள். இவற்றையே நாம் மரபு மன்றாட்டுக்கள் என்கிறோம்.

மரபு மன்றாட்டுக்கள் திருச்சபைக் குடும்பத்தின் சொத்துக்கள். காலங்காலமாக நம் முன்னோர்கள் பயன்படுத்தி, பலன் கண்ட செல்வங்கள். தூய ஆவியால் தூண்டப்பட்டு, புனிதர்களாலும், மாமனிதர்களாலும் உருவாக்கப்பட்ட உன்னத மன்றாட்டுகள்.

நமது வழிமரபின் சொத்து எனப் பெருமிதம் கொள்ளும் வகையில் ஏராளமாக மரபு மன்றாட்டுக்கள் நம்மிடம் உள்ளன. அவற்றில் மிகவும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருவனவற்றில் சில இதோ;

### 1. ஆண்டவர் கற்பித்த மன்றாட்டு :

முதல் நூற்றாண்டிலிருந்து இன்று வரை அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வரும் மன்றாட்டு இதுதான். இயேசுவாலே கற்றுக்கொடுக்கப்பட்ட சிறப்பு இதற்கு இருந்தாலும், இதையும் பயன்படுத்த மறுக்கும் சபையினர் இருக்கத்தான் செய்கின்றனர். அதற்கு அவர்கள் கொடுக்கும் காரணம், நாம் எவ்வாறு செபிக்கவேண்டும் என்பதற்கான ஒரு மாதிரியாகத்தான் இயேசு இந்தச் செபத்தைத் தந்தாரேயொழிய, இதையே செபிக்க வேண்டும் என்பதற்காக அல்ல என்பது. இருப்பினும், இத்தனை நூற்றாண்டுகளாக திருச்சபை இந்தச் செபத்தைப் பயன்படுத்தி வரும் மரபு இம்மன்றாட்டின் பயன்பாட்டை நியாயப்படுத்துகிறது. அது மட்டுமல்ல, இயேசுவே கற்றுக்கொடுத்த செபம் என்பதால், எல்லாச் செபங்களையும்விட இது உயர்வானது என்பதை யாரும் மறுக்க முடியாது.

### 2. மங்கள வார்த்தை மன்றாட்டு :

"அருள் நிறைந்த மரியே வாழ்க" என்னும் மன்றாட்டு இரண்டாவது பிரபலமான மன்றாட்டு எனலாம். இந்தச் செபத்தை அறியாத, பயன்படுத்தாத கத்தோலிக்கர் இலர். நெடிய மரபுகொண்ட செபம் இது. இந்த இரண்டு மன்றாட்டுகளையும் இணைத்துப் பயன்படுத்தும் செபமாலையும் நீண்ட மரபு கொண்ட ஓர் ஆழ்நிலைத் தியான வேண்டுதலே.

### 3. மூவேளைச் செபம் :

"ஏஞ்சல்" என்றழைக்கப்படுகிற ஆண்டவருடைய தூதர் மரியாவுக்கு, "மங்கள வார்த்தை அறிவித்தார்" என்னும் செபம் மிகவும் பழமையான ஒரு மன்றாட்டு. பல கலைஞர்களால் ஓவியமாக, சிற்பமாக வடிக்கப்பட்ட புகழ்நிறைந்த ஒரு மன்றாட்டு.

### 4. மாண்புயர் :

"மாண்புயர்" இவ்வருள்சாதனத்தைத் தாழ்ந்து பணிந்து ஆராதிப்போம் என்னும் பாடல் நற்கருணை ஆராதனைப் பாடலாகப் பாடிவருகிறோம். எவ்வளவு காலமாக தெரியுமா? 1264ஆம் ஆண்டு முதல்! அந்த ஆண்டுதான் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தப் பெருவிழாவுக்காக இறையியல் வல்லுனர் புனித தாமஸ் அக்குவினாஸ் இப்பாடலை எழுதினார். இப்பாடலுக்கு "மோசார்ட், புருக்னர், பாலஸ்டிரினா" போன்ற பல இசை மேதைகள் மெட்டமைத்திருக்கின்றனர் என்பது பெருமிதம் தரும் ஒரு செய்தி.

### 5. மிகவும் இரக்கமுள்ள தாயே :

"மிகவும் இரக்கமுள்ள தாயே" என்னும் மிகவும் பிரபல்யமான மரியன்னை மன்றாட்டை யாரேனும் அறியாதிருந்தால், அவர்கள் கத்தோலிக்கரே அல்லர் என்று சொல்லலாம். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பெர்னார்ட் இயற்றிய இந்தச் செபம் எத்துணை வலிமை வாய்ந்தது என்பதனை அதைச் செபித்தவர்கள் மட்டுமே அறிவர்.

புனித பெர்னார்டால் இந்தச் செபம் இயற்றப்பட்டிருந்தாலும், இதனை மிகவும் பிரபலப்படுத்திய பெருமை "கிளாட் பெர்னார்ட்" என்னும் பெயர் கொண்ட 17ஆம் நூற்றாண்டு பிரான்ஸ் நாட்டுக் குருவானவரையே சாரும். அவர் அந்தக் காலத்திலேயே இந்தச் செபத்தை இரண்டு இலட்சம் படிகள் அச்சிட்டு ஊர், ஊராகச் சென்று மாதா பக்தியைப் பரப்பினார் என வரலாறு சொல்கிறது. இந்தச் செபத்தால் எண்ணிலடங்கா நன்மைகள் நடந்தன. பெரிய குற்றவாளிகள் கூட மனந்திரும்பினர் என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது. இன்றளவும் கத்தோலிக்கர்களின் மனம் கவர்ந்த ஒரு மன்றாட்டு இது என்பதில் ஐயமில்லை.

### 6. கிருபை தயாபரத்துக்கு :

கிருபை தயாபரத்துக்கு மாதாவாயிருக்க எங்கள் இராக்கினியே வாழ்க என்பது ஆங்கிலத்தில் "Hail Holy Queen" என்றும் இலத்தீனில் "சால்வே ரெஜினா" என்றும் புகழ்பெற்ற இன்னொரு பிரபல்யமான மாதா மன்றாட்டு. இது அனைத்து மொழிகளிலும் அருமையான இசையில் பாடப்படுகின்ற பாடலும்கூட. இதுவும் பதினோராம் நூற்றாண்டில் இயற்றப்பட்டு, பத்து நூற்றாண்டுகள் பழமையான செபம். பல புனிதர்களாலும் விரும்பி செபிக்கப்பட்ட ஒன்று. புனித அல்போன்ஸ் லிகோரியார் இந்த மன்றாட்டால் எவ்வளவு எழுச்சி பெற்றாரென்றால், மரியின் மாட்சிகள் என்னும் தமது நூலில் இந்தச் செபத்தைப் பற்றி விரிவான விளக்கங்களை எழுதியுள்ளார்.

### 7. ஆழியின் மேல் ஒளிர் விண்மீனே :

(Ave Maris Stella) என்னும் மரியன்னைப் புகழ்ப் பாடலை மாதாத் திருவிழாக்களின்போது மாலை ஆராதனையில், (மாலைத் திருப்புகழ்மாலையில்) பாடி வருகிறோம் என்பது தெரியும். ஆனால், இப்பாடல் ஒன்பதாம் நூற்றாண்டிலேயே இயற்றப்பட்டது என்பது தெரியுமா? இந்தப் பாடலுக்கும் பாலஸ்ட்ரினா, டுபே, க்ரீக் போன்ற இசை மேதைகள் பலரும் மெட்டமைத்துள்ளனர். தமிழிலும்கூட இந்தப் பாடலைப் பாடும்போது, எத்துணை இனியதாய் உணர்கிறோம்.

### 8. கிறிஸ்துவின் ஆத்துமமே :

என்னும் அருமையான செபம் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றாலும், 16ஆம் நூற்றாண்டில் புனித லொயோலா இஞ்ஞாசியார்தான் இச்செபத்தைப் பிரபல்யமாக்கினார். இன்றளவும் பல கோவில்களில் நற்கருணை வாங்கியபிறகு இது செபிக்கப்படுகிறது. அல்லது பாடப்படுகிறது என்பது இச்செபத்தின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது.

### 9. தேதேயும் :

தேதேயும் என்ற புகழ்பெற்ற இலத்தீன் மொழி நன்றிப் பாடல் சில ஆண்டுகள் முன்பு வரை முந்தைய தலைமுறையினரால் மனப்பாடமாகப் பாடப்பட்டு வந்தது. இப்போது இதனை நாம் பாடாமலிருக்கலாம். ஆனால், அதன் தமிழ் வடிவமான "இறைவா உம்மை வாழ்த்துகிறோம், ஆண்டவர் நீரெனப் போற்றுகிறோம்" என்னும் நன்றிப் பாடல் திருவிழாக்களின்போதும், நன்றி நிகழ்வுகளின்போதும், சில பங்குகளில் திருமண அறிக்கைகள் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்தும் உற்சாகமாகப் பாடப்பட்டு வருகிறது. இது ஐந்தாம் நூற்றாண்டில் புனித நிசேதாசாஸ் என்பவரால் இயற்றப்பட்டது என்றால், எத்துணை பழமை வாய்ந்த செபம் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

### 10. ஆண்டவரே என்னை அமைதியின் கருவியாக்கும் :

ஆண்டவரே, என்னை அமைதியின் கருவியாக்கும் என்பது 13ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித பிரான்சிஸ் அசிசியாரின் பெயரால் அறியப்பட்ட ஒரு மன்றாட்டு. இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் முழுவதும் பரவலாகச் செபிக்கப்பட்ட செபம் இது. கிறிஸ்தவரல்லாத பலருக்கும்கூடப் பிடித்தமான ஒரு மன்றாட்டு. நிறுவனங்களில், அலுவலகங்களில், பள்ளிகளில் இந்தச் செபம் எழுதப்பட்டிருப்பதை எத்தனையோ பேர் பார்த்திருக்கின்றனர். அதனுடன் ஒன்றித்திருக்கின்றனர். "அன்னை தெரசா, மார்கிரேட் தாட்சர், பேராயர் டெஸ்டண்ட் டுட்டு, அப்துல் கலாம்" போன்ற பிரபலங்கள் அடிக்கடி பயன்படுத்திய செபம் என்பதில் நாம் பெருமிதம் அடையலாம்.

மேற்கண்ட பத்து மிகவும் புகழ்பெற்ற மரபு மன்றாட்டுகள் தவிர, "உணவுக்கு முன் செபம்", "உணவுக்குப் பின் செபம்", "காவல் தூதரை நோக்கி செபம்", "மிக்கேல் அதிதூதருக்கு மன்றாட்டு", "புனித அந்தோனியாரை நோக்கி மன்றாட்டு" என இன்னும் எத்தனை, எத்தனையோ மரபு மன்றாட்டுகளைக் காலம் காலமாக நாம் செபித்து வருகிறோம். சில நேரங்களில் அவற்றின் தொன்மையையும், பெருமையையும் அறியாமலே!

இவைகளெல்லாம் காலத்தை வென்ற, ஆற்றல்மிக்கச் செபங்கள் என்பதை உணர்ந்து தலைநிமிர்வோம். இந்த அருமையான மரபு மன்றாட்டுகளை நமது அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுத் தந்து, செபிக்கவைத்து விலைமதிப்பில்லா இப்புதையல்களைப் பாதுகாப்போம். நமது செப வாழ்வில் மரபு மன்றாட்டுக்களுக்கும் உரிய இடமளிப்போம்.

---

**படித்ததில் பிடித்தது**


சிறகடிக்க விரும்பாத பறவை உயரத்தில் பறக்காது!
சிரமப்பட விரும்பாத மனிதர் உயர்ந்து நிற்க முடியாது!

இரண்டாம் வருகையை பயத்தோடு அணுகாதே,
நல்ல வாழ்வு வாழ்ந்துகொண்டு அணுகு!

நாம் வாழ்வின் துன்பத்தில் இருக்கிறபோது,
நம்மோடு உறவாடுகிறவர்களே, உண்மையான உறவுகள்!

நற்சிந்தனைகளுக்கு நெருங்கிய நண்பனாயிருந்தால்,
தீய சிந்தனைகள் உனக்கு தூரமாகிவிடும்!

## புனித ஜெரோம் எமிலியானி (1481 – 1537)




இவர் இராணுவத்தில் சேர்ந்தார். கைதியாக்கப்பட்டார். புதுமையாக விடுதலை அடைந்தார். இதுவரை உலக நோக்குடன் வாழ்ந்த இவர் தம் வாழ்வைத் திருத்தி அமைப்பதாக தேவதாய்க்கு வாக்களித்தார். குருப்பட்டம் பெற்ற பின், கொள்ளை நோயினாலும், பஞ்சத்தினாலும் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்காக ஓர் இல்லத்தை அமைத்தார். உணவுப் பொருட்கள் வாங்கும்படி தமது உடைமைகள் அனைத்தையும் விற்றார். அனாதைக் குழந்தைகளையும் ஏழை நோயாளிகளையும் பராமரிக்க ஒரு புதிய சந்நியாச சபையை நிறுவினார். பின்னர் சந்நியாசிகள் சிறுவர்களுக்கு கல்வி கற்பிக்கத் தொடாங்கினார். தவறிய பெண்களுக்கென்று நம் புனிதர் ஒரு ஸ்தாபனத்தையும் அமைத்தார்.

**சிந்தனை : கைவிடப்பட்ட குழந்தைகளை காப்பாற்றி மோட்சம் சேர்ப்பதே பாலர் சபையின் நோக்கம். பெரியவர்களும் இந்த சபையின் நோக்கம் நிறைவேற செபிக்கலாம். பொருளுதவி செய்யலாம்**

## புனித அருளானந்தர் (1647 – 1693)

இவர் போர்த்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் 1647, பங்குனி 1ம் திகதி பிறந்தார். உயர்ந்த பதவியை உதறி தள்ளிவிட்டு, இவர் இயேசு சபையில் சேர்ந்து இந்தியாவுக்கு வந்தார். மக்களை கடவுளிடம் கொண்டுவர இவர் உழைக்க வேண்டும். அவ்வேலையைத் தொடங்குமுன் தம்மை தயாரிக்கும்படி முப்பது நாள் ஞானஒடுக்கம் செய்தார். தமிழ் மொழியில் பேசவும், போதிக்கவும் திறமை பெற்றார். அடுத்த பத்து ஆண்டுகளாக தமிழ் நாட்டில் பல இடங்களுக்குச் சென்றார். சென்னை, வேலூர், தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் இம்மாவட்டங்களை அவர் சந்தித்து தம்மால் இயன்ற நன்மை செய்தார்.

1664ல் இராமநாதபுரம் மகாராஜா இவரைக் கைது செய்தான். நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்ற நிபந்தனையின் மேல் இவரை விடுதலை செய்தான். இவரை பரயராக்க பெருமுயற்சிகள் நடைபெற்றன. இவர் இணங்கவில்லை. திரும்பவும் இந்தியாவுக்கு வந்து மறவன் சீமையில் உழைத்தார். அரச குடும்பத்தைச் சேர்ந்த தடியத் தேவர் கிறிஸ்தவராக விரும்பினார். அவருக்கு மனைவியர் பலர் உண்டு. முதலில் மணமுடித்தவளை மட்டும் வைத்துக்கொண்டு ஏனையோரைத் தள்ளிவிட்டார். தள்ளப்பட்டவர்களில் ஒருத்தி இராமநாதபுரம் அரசனின் நெருங்கிய உறவினள். பெயர் கடலாய். அவள் அரசனிடம் முறையிட அரசன், 1693 மாசி 4ம் நாள் விபூதி விழாவன்று அருளானந்தரின் தலையை வெட்டிக் கொல்ல கட்டடையிட்டான். வெட்டுண்ட இடத்திலுள்ள மண் இன்றும் சிவப்பாக காணப்படுகின்றது.

**சிந்தனை : நான் கடவுளது அழைப்புக் குரலுக்கு இணங்காவிட்டால் கடவுளது கோபத்தை எழுப்பி விடுகிறேன்.**




## புனித ஸ்கொலஸ்திக்கா

புனித ஸ்கொலஸ்திக்கா புனித பெனடிக்ட்டின் சகோதரி. புனித பெனடிக்ட் இத்தாலியின் மொன்டிகாசினோவில் மடத்தை ஆரம்பித்த பின் அங்கிருந்த 5 கல் தொலைவில் புனித ஸ்கொலஸ்திகாவும் பெண் துறவிகளுக்கான மடத்தை ஆரம்பித்தார். இருப்பினும் வருடத்திற்கு ஒரு முறை மட்டுமே இவர்கள் ஒருவர் ஒருவரைச் சந்தித்தனர். இவர்களின் புனித வாழ்வு இவர்களுடைய சபையில் ஏராளமான இளைஞர், இளம் பெண்கள் சேர




வழிகாட்டியாக அமைந்தது. புனித ஸ்கொலஸ்திக்கா 543ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். தனக்கென தயாரித்த தன் கல்லறையில் தன் சகோதரியை அடக்கம் செய்தார். புனித பெனடிக்ட் அவள் இறந்த சில காலத்திலேயே புனித பெனடிக்ட்டும் இறைபதம் அடைந்தார்.

# பிளாஸ்டிக் குடுவைகள்

## உடல்நலத்துக்குக் கேடு!

### கண்ணாடி பொருள்களே நற்பயன் தருபவை

நாம் வீடுகளில் பிளாஸ்டிக் பாத்திரங்கள், டப்பாக்கள் பயன்படுத்துகிறோம். ஆனால் உடல் ஆரோக்கியத்துக்கு இது நல்லதல்ல. இதற்கு மாற்றாக கண்ணாடிப் பொருள்களை உபயோகிப்பதால் என்ன நன்மைகள் என்று பார்ப்போம்.

சமைத்த உணவு மட்டுமின்றி, உணவு தயாரிக்கத் தேவையான மளிகை பொருட்களையும் முறையாகவும் சுத்தமாகவும் பாதுகாத்து வைப்பது மிகவும் அவசியம். பெரும்பாலும் இன்றைய வீடுகளில் நாம் இதற்கு பிளாஸ்டிக் பாத்திரங்கள், டப்பாக்கள் மற்றும் குடுவைகளைத்தான் பயன்படுத்துகிறோம்.



### பிளாஸ்டிக்கை விட பாதுகாப்பானது

பிளாஸ்டிக்கில் உள்ள ரசாயனங்கள் உணவுப் பொருள்களில் கலக்கும் வாய்ப்பு ஏற்படலாம். அதிக குளிர்ச்சி மற்றும் அதிக சூடான பொருள்களை பிளாஸ்டிக்கில் வைக்கும்போது, அதாவது ஃப்ரிட்ஜ் மற்றும் மைக்ரோவேவ் ஓவனில் வைக்கும்போது இந்த ரசாயன கலப்பு நடக்கும். ஆனால் கண்ணாடிப் பாத்திரங்கள் தான் மாற்றம் அடைவதில்லை. மேலும், அதன் தன்மை மற்ற பேரணுக்களை தன்னுள் அனுமதிக்காத மிகவும் கெட்டியான தன்மை கொண்டதாகும்.

### கண்ணாடி சூட்டை தாங்கக்கூடியது

உணவை சமைத்த உடனேயே கண்ணாடி பாத்திரத்தில் மாற்றி விடலாம், பாத்திரத்தை மூடியும் வைத்துக் கொள்ளலாம். மீதம் உள்ள உணவை அப்படியே பிரிட்ஜில் சேமிக்கவும் இது பாதுகாப்பானது. நீண்ட நாள்களுக்கு மளிகை பொருட்களை சேமிக்கவும், அதன் நிறம் மற்றும் மணம் மாறாமல் இருக்கவும் கண்ணாடிக் குடுவைகள் சிறந்ததாக இருக்கும். பாத்திரத்தின் ரசாயனம் எதுவும் சூடான பொருளில் கலப்பதில்லை என்பதாலும் கண்ணாடிப் பாத்திரங்கள் நல்லது.

### பல் உபயோகம் கொண்டது கண்ணாடி

ஒரே பாத்திரத்தில் மூடி போட்டு சேமித்தும் வைக்கலாம். சமைத்த உணவுப் பொருளை சூடாக போட்டும் வைக்கலாம் அல்லது சமைக்கவும் பயன்படுத்தலாம். அதே பாத்திரத்தை பிரிட்ஜ் அல்லது ஃப்ரீசரில் மிக குளிர்ச்சியாகவும் பாதுகாக்கலாம். கண்ணாடியில் உள்ள உணவுப் பொருளை அப்பாத்திரத்தில் வைத்தே பரிமாறலாம். இப்படி பல உபயோகங்களுக்கு கண்ணாடி பயன்படுகிறது.

### சுத்தம்.ஃ.வெளிப்படை தன்மை

மளிகை மற்றும் உணவுப் பொருள்களை கண்ணாடிப் பாத்திரங்களில் சேமிக்கும்போது அதனை சுத்தப்படுத்துவது சுலபம். வாசனையோ, அழுக்கோ, கறையோ அதில் படிவதில்லை. மேலும் அதன் உள்ளே என்ன பொருள் இருக்கிறது என்பதை நாம் சுலபமாக தெரிந்துக் கொள்ளலாம்...

15




## மருத்துவக் குறிப்புக்கள்

- பூண்டு வெங்காயம் அதிகம் உணவில் சேர்த்து வந்தால் தேவையற்ற கொழும்பு குறையும்.
- எலுமிச்சம் பழத்தின் சாறை ஓரிரு துளியைக் காதில் விட காது வலி தீரும்
- விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் ஒன்று சாப்பிட்டால் பித்தத்தைக் குறைக்கலாம்.
- உப்பு நீரை வாயில் வைத்து தொண்டை வரை படும்படி வாய் கொப்பளித்து வந்தால் தொண்டை வலி குணமாகும்.
- அத்திப்பழம் தினந்தோறும் 5 சாப்பிட்டு வர நரம்புத் தளர்ச்சி சரியாகும்.
- முற்றிய வெண்டிக்காயை சூப் செய்து குடித்து வந்தால் இருமல் உடனே நிற்கும்.
- கோதுமை கஞ்சியை மாதவிடாய் இருக்கும் காலங்களில் சாப்பிட்டு வந்தால் உடற்சோர்வு நீங்கி பலம் பெறும்.
- பசு நெய்யில் தயிர் கலந்து சாப்பிட்டு வந்தால் நரைமுடி கருமையாக மாறும்
- அல்லி இதழ்களை சந்தனத்துடன் சேர்த்து அரைத்து இரவில் முகத்தில் பூசி காலையில் குளித்து வர முகப்பருக்கள் ஒழியும்.
- குடல்புண் குணமாகவும், வயிற்றுப்புழுக்கள் அழியவும். அகத்திக்கீரை நல்ல உணவு.
- சுக்கு, பால், மிளகு, திப்பிலி கலந்து பொடி செய்து தேனில் கலந்து சாப்பிட்டால் தொண்டை கரகரப்பு குணமாகும்
- தேனில் ஊறவைத்த நெல்லிக்காயை தினசரி ஒன்று சாப்பிட்டு வர நுரையீரல் பலப்படும்.

## 01 இயேசு சபைக்கு ...

இறைபணிக்கு அர்ப்பணிக்கப்பட்ட குருவானவர் எப்போதும் இறைமக்களுக்கு பணி செய்வதோடு, தொலைந்துபோன செம்மறி ஆட்டுக்குட்டியை தேடிச் செல்ல வேண்டும். என யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் இயேசு சபையின் குருத்துவ குருத்துவ திருநிலைப்படுத்தலின் போது தெரிவித்தார்.

“நல்லாயனாகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் அவதரித்தது சேவையை பெற அல்ல, சேவையைப் புரியவே ஆகும். குருத்துவ திருநிலைப்படுத்தப்படும் நீங்களும் இறைபணியில் ஈடுபட்டு, தொலைந்து போன ஆடுகளை எம் மந்தையில் ஒன்று சேர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்” என யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு யஸ்டின் ஞானப்பிரகாசம் ஆண்டகை கடந்த தினம் தெஹிவளை புனித, மரியாள் ஆலயத்தில் இடம்பெற்ற இயேசு சபை குருவான அருட்பணி. நோயல் அஜந்தன் ஜெயநாதன் அடிகளாரின் குருத்துவ திருநிலைப்படுத்தல் திருப்பலி மறையுரையில் தெரிவித்தார்.


இயேசு சபை பிரதேச தலைவர் அதிஉயர். டெக்ஸ்டர் கிரே (Dexter Gray) அவர்கள் கொழும்பு மறைகோட்ட பிரதான தலைவர் அருட்பணி. சுஜீவ பத்திரனா அவர்கள் பங்களிப்பு வழங்கினர். அருட்பணி நோயல் அஜந்தன் ஜெயநாதன் அடிகளார் அவரது முதற்திருப்பலியை கடந்ததினம் தெஹிவளை புனித மரியாள் ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து.**

## 07 விவிலிய வாசிப்பு

என்னும் வசனத்தில் பெயரிடுதல் என்பது பெயரிடுபவர் பெயரிடப்படுவதன்மீது ஆளுகை கொண்டிருப்பது என்னும் பொருளில் மனிதர் இயற்கை மீது ஏகபோக உரிமை கொண்டிருக்கிறார் என்னும் கருத்தும் நிலைபெற்றது.

இவ்வகையான பொருள் கொள்ளுதல் எல்லாம் முறையானது தானா? சரியானது தானா? பொருள் கொண்டவரின், அவரின் சமூகத்தின் (அமெரிக்க, ஐரோப்பிய, கிரேக்க) சித்தாந்தங்கள், மெய்யியல் தத்துவங்கள், அவர்களின் அரசியல் பொருளாதார நலன்கள் இவ்வகை பொருள்கோள் முறைக்கு காரணங்களாக அமைந்திருக்க வாய்ப்புக்கள் உண்டு. உண்மையில் விவிலியம் உருப்பெற்ற பழங்கால அண்மை கிழக்கிந்திய கலாச்சாரத்தில் இந்த விவிலிய வசனங்களின் பொருள் என்ன? விவிலியத்தின் பிற பகுதிகளில் இந்த வசனங்கள், வார்த்தைகள் எப்படி எடுத்தாளப்பட்டுள்ளன? அவற்றின் அடிப்படையில் இந்தப் பகுதிகளுக்கு விவிலிய அறிஞர்கள் சூழல் சார்ந்த நிலைப்பாடு எடுத்துக்கூறும் விளக்கங்கள் யாவை என்பதை ஆராய்வது அவசியமாகிறது. அதற்கு முன், இந்தவகை (சூழலுக்கு எதிரான) பொருள்கோள் முறைகள் தொடக்க முதலே இருந்ததா? அல்லது வரலாற்றில் எப்போது இப்பிழையானப் போக்கு வந்துள்ளது என்பதையும் சிறிது ஆராய்வது நலம் பயக்கும். (தொடரும்)



## மணமகள் தேவை

கத்தோலிக்க, வத்தளையில் வசிக்கும் 37 வயதுடைய தனியார் நிறுவனத்தில் QS ஆக தொழில்புரியும் படித்த 5' 4" உயரம், நல்ல குணமுடைய மகனுக்கு நல்ல குணமுடைய அழகான, படித்த மணமகள் தேவை **தொடர்புகளுக்கு : 0768609698**

**mproposals914@gamil.com**

(N5465)



## மணமகன் தேவை

மலையகம் களுத்துறை மாவட்டம் பட்டதாரியுடைய ஆசிரியையாக கடமைபுரியும், 30 வயதுடைய மகளுக்கு, தகுந்த மணமகனை விரும்புகின்றனர்.

**தொடர்புகளுக்கு : 0774017273**

(N5449)

உங்கள் ஆன்மீக தோழன்

கிளரீசியன் வெளியீட்டகம்



Claretian Publications

*your spiritual companion*

2019 ஜனவரி 30 ஆம் திகதி முதல்

புதிய தோற்றத்தோடும் மேம்படுத்தப்பட்டவசதிகளோடும்

மீண்டும் றாகமையில்

உங்களுக்கு தேவையான

கத்தோலிக்க மற்றும்

சகல ஆன்மீகப்

புத்தகங்கள், சின்னங்கள்,

இறுவட்டுக்கள் என்பன

விற்பனைக்கு உண்டு.



இல:55, றாகமை வீதி, வெலிசர.

www.claretianpublications-lanka.org claretpu@gmail.com

claretianpublications-Srilanka claretian PB

+94 11 2 953 434 +94 77 8 032 348

(N5307)

# நன்றியுணர்வால் மலரும் புதுவாழ்வு



ஒரு மனிதர் பயனற்ற பொருள்களைக் கொண்டு, தரைபோடும் தொழிலைத் தொடங்கினார். ஆனால் அவரது கஷ்ட காலம், கடைசியில் ஒரு பைசாகூட இல்லாமல் அவர் தவித்து நின்றார். அடுத்தடுத்து துயரங்கள் வந்துகொண்டே இருந்தன.

ஆனால் அவர் மனந்தளரவில்லை.

ஒருநாள் ஒரு துண்டுக் காகிதத்தை எடுத்தார். அதில் தனக்குச் சொந்தமான எல்லாவற்றையும் எழுதினார். அன்பான குடும்பம், நல்ல வலிமையான உடல், சுறுசுறுப்பான நல்ல நேர்மறை எண்ணம், எந்த நிலையிலும் கைவிடாத நண்பர்கள், நன்கு கற்றவர்கள் மற்றும், அவரது தொழிலில் அவருக்கு கிடைத்த அனுபவம் ஆகிய அனைத்தையும் அந்தத் தாளில் எழுதினார். இவையனைத்தையும் நினைத்து மிகவும் மகிழ்வுற்று, கடவுளுக்கு நன்றி கூறி, புதிய தொழிலைத் தொடங்க முற்பட்டார். அவருடைய தன்னம்பிக்கையும், துணிவும், எதிர்நீச்சலும் அவருக்கு வெற்றியைக் கொணர்ந்தன. ஒருசில ஆண்டுகளில் மாபெரும் தொழில் நிறுவனம் ஒன்றின் தலைவரானார் அவர். நான் அப்போதும் செல்வந்தராய் இருந்தேன், இப்போதும் அப்படியே இருக்கிறேன் என்றாராம் அந்த மனிதர்.

**இளையோரே, நான் அந்த மனிதரைப் போல் இருந்திருந்தால் எவ்வளவோ முன்னேறியிருப்பேன் என்று சொல்லி, வாழ்வை விரயமாக்காமல், கடவுள் கொடுத்திருக்கும் கொடைகளை எண்ணி, அவருக்கு நன்றி கூறினால் போதும். நமக்கு மலரவேண்டியவை நம் எண்ணத்தைப் போல் மலரும்.**

## 10 விவிலியப் பகுதி விடைகள்

16. கிழக்கிலிருந்து [2:1]
17. ஏரோது அரசன் [2:4]
18. விண்மீன் [2:10]
19. பொன், சாம்பிராணி, வெள்ளைப்போளம் [2:11]
20. ஏரோதிடம் [2:12]
21. இராக்கேல் [2:18]
22. எரேமியா [2:17-18]
23. ஆர்க்கெலா [2:22]
24. திருமுழுக்கு யோவான் [மத் 3:1]
25. இறைவாக்கினர் எசாயா [3:3]
26. ஒட்டக முடியினால் ஆன ஆடை [3:4]
27. எருசலேம் யூதேயா, யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதி [3:5]
28. பரிசேயர், சதுசேயர் [3:7]
29. அதற்கேற்ற செயல்களால் [3:8]
30. ஆபிரகாமுக்கு [3:9]

## 14 பிளாஸ்டிக்...

பொருட்கள் கெடத் தொடங்கும்போதே அதை கண்டுபிடித்து அப்புறப்படுத்துவதும் சுலபம்.

கண்ணாடிக் குடுவைகள் எவ்வளவு காலமானாலும் உடையாத வரையில் உபயோகப்படுத்தலாம். உணவுப் பொருள்களின் வாசனையையும், அது பெற்றுக் கொள்வதில்லை. பல வருடங்கள் தொடர்ந்து உபயோகப்படுத்தவும் ஏற்றது.

**நன்றி : மாலைமலர்**

## 02 கொழும்பு உயர் மறை...

| | | | |
|---|---|---|---|
| 27 | திருச்சிலுவை கல்லூரி, கம்பஹா | சித்திரை 06ஆம், 07ஆம் திகதிகள் 2019 மேற்கூறப்பட்ட சான்றிதழ்களுடன் சமூகமளிக்கவும். அத்தோடு PPA உறுப்பினர் அட்டையை கொண்டு வருதல் வேண்டும். | காலை 8.30 - 12.00 மணி வரை |
| 28 | புனித சூசையப்பர் ஆண்கள் கல்லூரி, நுகேகொடை | வைகாசி 02ம் திகதி தொடக்கம் வைகாசி 31ஆம் திகதி வரை 2019 | காலை 7.30 - 01.30 மணி வரை |
| 29 | புனித தோமையார் சர்வதேச பாடசாலை, சீதுவ | மாசி 15, 18, 20, 21, மற்றும் 22 திகதிகள் - 2019 | காலை 9.00 - ந.ப. 12.00 மணிவரை |
| 30 | புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, பலாவட்ட | பங்குனி 11ஆம் திகதி - 2019 | காலை 7.30 - பி.ப. 01.30 மணிவரை |
| 31 | புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு | விண்ணப்பங்களை வழங்குவதற்கான குறிப்பிட்ட திகதிகள் எதுவும் இல்லை. பாடசாலை நாட்களில் கல்லூரி அலுவலகத்தில் ஆண்டு முழுவதும் பெற்றுக்கொள்ளலாம். | காலை 08.00 - 03.30 மணிவரை |

1. விண்ணப்பத்தைப் பெற்றுக்கொள்ள உங்களது குடும்ப புத்தகம், குழந்தை திருமுழுக்கு பெற்றதற்கான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ் அவசியம். இவ் ஆவணங்களை ஒவ்வொரு பாடசாலைக்கும் ஏற்ற விதத்தில் சமர்ப்பிப்பதுடன், விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள திருமுழுக்கு சான்றிதழினை சமர்ப்பித்தல் போதுமானது, அதனை பரீசிலித்துவிட்டு மீண்டும் உங்களுக்கே திருப்பிக் கொடுக்கப்படும். ஆனால் விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் போது பிரதிகளை மாத்திரம் கொடுத்தால் போதும். குழந்தைகளை பாடசாலையில் சேர்க்கும் போது முதற் பிரதிகளை கொடுத்தல் அவசியமாகும்.
2. விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் பாடசாலை அனுமதி வழங்குவதற்கு போதிய இடவசதியின்மையின் காரணமாக, அரசாங்க பாடசாலைகளிலும் பிள்ளைக்கான விண்ணப்பங்களை கோரவும்.
3. மேலும் பணம் பெறும் நோக்குடன் அனுமதியினை பெற்றுத்தருவதாக கூறும் நபர்கள் மட்டில் உங்கள் கவனத்தை செலுத்துவதோடு, அத்தகையவர்கள் பற்றிய விபரம் அறிந்தால் எமக்கு அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**அருட்பணி. ஐவன் பெரேரா, கொழும்பு உயர் மறைமாவட்ட கல்வி இயக்குனர், கத்தோலிக்க தனியார் பாடசாலை, அதிகாரி(W.P)**




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்

### திருமண சேவைகள்



- திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உடம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.
- திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.

### வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்















| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |











| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்